இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 150 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 24 – செவ்வாய்க்கிழமை 09 ஜனவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 150 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 24 - Tuesday 09 January 2024 - Chennai 16 Pages ₹ 5.00



### உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கிடைத்திருக்கும்

# மொத்த முதலீடு 6,64,180 கோடி ரூபாய்!

## தமிழ்நாட்டில் 26 லட்சத்து 90 ஆயிரத்து 657 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாகும்!

## உலக முதலீட்டாளர்கள் 2 நாள் மாநாட்டு நிறைவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன.9–

**“இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, இறுதி செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவாக, 6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் என்பதை, இந்தியாவே உற்றுநோக்கும் இந்த அவையில் பெரும் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன் என்றும், இந்த முதலீடுகள் மூலம் நேரடி மற்றும் மறைமுகமாக மொத்தம் 26 லட்சத்து 90 ஆயிரத்து 657 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய அவ்வுரை வருமாறு:**

”உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 நிறைவு விழாவில் பங்கேற்று சிறப்பித்துள்ள இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அன்பரசன் அவர்களே, தொழில் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்களே, வருகை தந்திருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா அவர்களே, தொழில் துறை செயலாளர் அருண் ராய் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக் IAS அவர்களே, பல்வேறு அரசு துறைச் செயலாளர்களே, தலைசிறந்த தொழில் முனைவோர்களான Chairperson – மகேந்திரா குரூப் Chairperson – TAFE MD – Adani Ports CEO – செயின்ட் கோபின் MD – டாடா பவர் VP – பவ் சென் MD – ராம்கோ CII தமிழ்நாடு தலைவர் உள்ளிட்ட அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகளே, பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளே, தொழில் துறையைச் சார்ந்த வல்லுநர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்த நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட மாடல் அரசின் இந்த உலக முதலீட்டாளர் மாநாட்டின் மூலமாக, தமிழ்நாட்டினுடைய 20 ஆண்டுகால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக உங்கள் எல்லோருக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.12024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில், பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிறுவனங்களின் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் வார்டு தாரிக் அகமது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானப், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen சென் நிறுவனத்தின் துணைத் தலைவர் Mr. Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டை உலகமே வியக்கும் வகையில் நடத்தி இந்தியாவே வியக்கும் வகையில் முதலீட்டை ஈர்த்து என் இதயத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார் தம்பி டி.ஆர்.பி ராஜா அவர்கள். தொழில்துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட குறுகிய காலத்திலேயே இமாலயச் சாதனையைச் செய்திருக்கும் அமைச்சர் டி.ஆர்.பி ராஜாவைப் பாராட்டுகிறேன்.

இவ்விழாவில் கண்ணும் கருத்துமாய் இருந்த தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, ”முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலமாக, ஒரு லட்சத்து 90 ஆயிரத்து 803 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 2 லட்சத்து 80 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

**முதலீடுகளின் செயல்வடிவம்! தொடர்ந்து கண்காணிப்பேன்!**

நான் ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, 17 ஆயிரத்து 371 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துகிற வகையில், 7 ஆயிரத்து 441 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளைப் பெற்றோம். அதோடு, நான் தொடர்ந்து இந்த முதலீடுகள் செயல்வடிவம் பெறுவதைக் கண்காணிப்பேன்.

**தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சல்!**

அந்த வகையில், ஆட்சிக்கு வந்ததில் இருந்து இதுவரை 44 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். 27 தொழிற்சாலைகளைத் திறந்து வைத்திருக்கிறேன். இதன் மூலமாக 74 ஆயிரத்து 757 இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

அந்த நம்பிக்கையோடு சொல்கிறேன், இந்த மாநாடு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக அமையும்! தமிழ்நாட்டின் வரலாற்றில் நிச்சயம் இது நினைவு கூரப்படும்! இந்த மாநாட்டினுடைய தனித்துவமும் புதுமைத்துவமும் என்றென்றும் பேசப்படும்!

நான் அதிகாரிகளுக்கு ஆரம்பத்திலேயே ஒரு அன்புக்கட்டளை இட்டேன். “உலக அளவில் முதலீட்டுக்கான சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை முன்னேற்ற வேண்டும். இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதற்கான முக்கியக் காரணமாக அதுதான் இருக்க வேண்டும்” என்று தெரிவித்தேன்.

**எங்களுடைய அயராத உழைப்பு மற்றும் உங்களுடைய பங்களிப்பு காரணமாக, இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, இறுதி செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவாக, 6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் என்பதை, இந்தியாவே உற்றுநோக்கும் இந்த அவையில் பெரும் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.**

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### என் இதயத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்டார் தம்பி டி.ஆர்.பி.ராஜா!



**இந்த மாநாட்டை உலகமே வியக்கும் வகையில் நடத்தி இந்தியாவே வியக்கும் வகையில் முதலீட்டை ஈர்த்து என் இதயத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார் தம்பி டி..ஆர்.பி ராஜா அவர்கள். தொழில்துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட குறுகிய காலத்திலேயே இமாலயச் சாதனையைச் செய்திருக்கும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவைப் பாராட்டுகிறேன்.**

**இவ்விழாவில் கண்ணும் கருத்துமாய் இருந்த தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

---

### உலக முதலீட்டாளர்களின் 2-ஆம் நாள் மாநாடு!

## 300க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகின!

சென்னை, ஜன. 9-

சென்னையில் நடைபெற்று வரும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் இரண்டாவது நாளான நேற்று, முதலமைச்சர் முன்னிலையில் நேற்று 300க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

2030ம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார். இதற்காக சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட முதலமைச்சர், முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக சென்னை நந்தம்பாக்கத்தில் இரண்டு நாட்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டின் தொடக்கத்திலேயே, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், டாடா எலெக்ட்ரானிக்ஸ், பெகட்ரான், டிவிஎஸ் குழுமம், மிட்சுபிஷி, ஏ.பி. மோலார் மெர்ஸ்க், ஹூண்டாய், JSW, அசோக் லேலண்ட் மற்றும் வின்பாஸ்ட் ஆகிய முக்கிய நிறுவனங்களின் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. முதல் நாளில் 5.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள தொழில் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பல்வேறு நிறுவனங்களுடன் கையெழுத்தாகின.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் தலைமைத்துவம், அதன் நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Leadership, Sustainability and Inclusivity) ஆகிய கருப்பொருட்களை கொண்டு இரண்டாவது நாளாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. நேற்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதனைத்தொடர்ந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்.

### உலக முதலீட்டாளர்கள் மாநாடு:

## குறு, சிறு நிறுவனங்களிடமிருந்து ரூ.40 கோடி கொள்முதல்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேட்டி!

*சென்னை, ஜன. 9 -*

*சென்னையில் நடைபெற்று வரும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் 2ம் நாளான நேற்று குறுசிறு தொழில்துறை சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. துறையமைச்சர் தா.மோ. அன்பரசன் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்.*

*முதலீட்டாளர்கள் மாநாட்டில் நடத்தப்பட்டு வரும் வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பின் போது, குறுசிறு தொழில்துறை சார்ந்த 174 நிறுவனங்களிடமிருந்து 50.70 லட்சம் அமெரிக்க டாலருக்கு, அதாவது, சுமார் 40 கோடி ரூபாய்க்கு கொள்முதல் நடைபெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார். இதில் 16 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் 73 புதிய முதல்முறை ஏற்றுமதியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தா. மோ.அன்பரசன் தெரிவித்தார்.*

*தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் தாமோ அன்பரசன், “சிறுகுறு தொழில்துறையில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள்” குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிடுவார் என தெரிவித்தார். குறு, சிறு கருத்தரங்கு நிகழ்ச்சியில் இந்திய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தென் மண்டல நிர்வாகிகள் இஸ்ரார் அகமது, ஹபீப் உசேன், தொழில் துறையின் அரசுச் செயலர் வி.அருண்ராய், MSME துறையின் அரசுச் செயலர் அர்ச்சனா பட்நாயக், மற்றும் அதிகாரிகள், ஏற்றுமதியாளர்கள், தொழில் அதிபர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 09-01-2024

# முத்தமிழறிஞரின் பேரால்...

சென்னை புத்தகக் கண்காட்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பதிலாகத் திறந்து வைத்து உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 'ஒரு பதிப்பாளராகவும் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன்' என்று சொன்னார்கள். ஆம்! 'முத்தமிழறிஞர் பதிப்பகம்' என்று முத்தமிழறிஞரின் பெயரால் புதிய பதிப்பகத்தை உருவாக்கி இருக்கிறார் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

**திராவிட இயக்கம் என்பது படைப்பாளிகள் இயக்கம். அந்த படைப்பாளிகள் இயக்கத்தின் தொடர்ச்சிதான் தான் என்பதை மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மெய்ப்பித்துக் காட்டி இருக்கிறார்.**

**திராவிட இயக்கம் என்பது அறிவியக்கம். அத்தகைய அறிவியக்கத்தின் தொடர்ச்சிதான் தான் என்பதை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உலகுக்கு உணர்த்தி இருக்கிறார்.**

கழகம் முதன் முதலில் ஆட்சிக்கு வந்தபோது பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தது. முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா உள்பட அந்த அமைச்சரவையில் இருந்த ஐந்து பேர் பத்திரிகையாளர்கள் என்பது இந்த இயக்கத்துக்கு மட்டுமல்ல, பத்திரிகை உலகத்துக்கும் பெருமை ஆகும். திராவிடநாடும், காஞ்சியும் அண்ணா நடத்தியவை. மன்றமும் மக்களாட்சியும் நாவலர் நடத்தியவை. முரசொலியும் முத்தாரமும் மறவன் மடலும் கலைஞர் நடத்தியவை. அன்னை இதழை நடத்தியவர் சத்தியவாணி முத்து. தென்னகம் நடத்தியவர் மதியழகன். அந்த வகையில் திராவிட பத்திரிகையாளர் அமைச்சரவையாகவே அது அமைந்திருந்தது.

தமிழ்நாட்டு இதழியல் வளர்ச்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் பங்களிப்பு இது. இதழ்களை உருவாக்கினார்கள். எழுத்தாளர்கள், படைப்பாளிகளை உருவாக்கினார்கள். இதன் மூலமாக அறிவாளர்களை தமிழ்ச் சமூகத்தில் உருவாக்கினார்கள். இவை அரசியல் இதழ்களாக மட்டுமல்ல, இலக்கிய இதழ்களாகவும் இருந்தன. அரசியல் கட்டுரைகளோடு சேர்ந்து கதை, புதினம், கவிதை, நாடகங்களையும் வெளியிட்டன. தமிழ் இதழியல் மட்டுமல்ல, தமிழ் இலக்கியமும் வளர்ந்தது. புதிய படைப்புகளும் படைப்பாளிகளும் கிடைத்தார்கள்.

புதிய கருத்துக்கள் சொல்லப்பட்டன. சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு, சமஸ்கிருத எதிர்ப்பு, வடவர் ஆதிக்கம், இந்தி எதிர்ப்பு, பெண்ணின் உரிமைகள், இனப்பற்று, மொழிப்பற்று ஆகியவை அதிகமாக இந்த இதழ்களில் பேசப்பட்டன.

இதேபோல் சிறுசிறு புத்தகங்களை வெளியிட்டு மக்களிடம் பரப்பினார்கள். தந்தை பெரியார் போட்டுத் தந்த பாதையாகும் இது. தொடக்கக் காலத்தில் தி.மு.க. கொள்கை முழக்கப் புத்தகங்களை திராவிடப் பண்ணை, அறிவுப் பண்ணை, திராவிடன் பதிப்பகம், செல்வ நிலையம், முன்னேற்றப் பண்ணை, புகழ் நிலையம், பாரி நிலையம், தலைவன் பதிப்பகம், அஞ்சுகம் பதிப்பகம், தூயமலர் நிலையம் – உள்ளிட்ட பதிப்பகங்கள் தொடர்ச்சியாக வெளியிட்டன.

என்னைக் கவர்ந்த புத்தகங்கள், வீட்டிற்கோர் புத்தகச்சாலை, சொல்வதெல்லாம் செய்தல் சுதந்திரம், ஆரிய மாயை, திராவிடர் நிலை, வாழ்க திராவிடம், நிலையும் நினைப்பும், கருஞ்சட்டைப் படை ஒழிய வேண்டுமா?, நாடகக் கலையின் முன்னேற்றம், கோவையில் கருணாநிதி உரை, இனமுழக்கம், கோவில்பட்டி தலைமை உரை, பலிபீடம் நோக்கி, அறப்போர் – ஆகியவை தொடக்க காலத்தில் பரபரப்பாக விற்ற புத்தகங்கள்.

திராவிட இயக்கத்தவர் நடத்திய இதழ்களும், வெளியிட்ட புத்தகங்களும்தான் இந்த இயக்கத்தை நோக்கி தமிழ்நாட்டையே பார்க்க வைத்தது. அதன் தொடர்ச்சியை மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மீண்டும் உருவாக்கிக் காட்டி இருக்கிறார். 'முத்தமிழறிஞர் பதிப்பகம்' ஒன்பது நூல்களை வெளியிட்டு இருக்கிறது.

2023 பொங்கல் முதல் கலைஞரின் மூத்த பிள்ளையான 'முரசொலி'யின் கடைசிப் பக்கம் பாசறைப் பகுதியாக உருவானது. நாள்தோறும் ஒரு கட்டுரை வெளியானது. அவை புத்தகங்களாக ஆகி இருக்கின்றன.

*** வழக்கறிஞர் அ. அருள்மொழி 'திராவிடப் போராளிகள்' என்ற தலைப்பின் பெண் போராளிகளை வரிசைப்படுத்தி வழங்கினார்.**

*** 'இடம் – பொருள் – கலைஞர்' என்ற தலைப்பில் காலத்தால் அழியாத கலைஞரின் உட்கட்டமைப்புகள் தீட்டப்பட்டது.**

*** சட்டமன்ற உறுப்பினரும் மருத்துவருமான எழிலன் நாகநாதன், 'டாக்டர்' கலைஞர் என்ற தலைப்பின் கீழ் கலைஞர் உருவாக்கிய மருத்துவக் கட்டமைப்பு குறித்து எடுத்துச் சொன்னார்.**

*** பேராசிரியர் சுப.குணராஜன் 'திராவிட சினிமா' தீட்டினார்.**

*** 'திராவிட மாடல் அரசு' பத்திரிகையாளர் ந.வினோத் குமாரால் எழுதப்பட்டது.**

*** கலைஞரும் நானும் என்ற தலைப்பில் குறிப்பிடத்தக்க மனிதர்கள் தங்களது நட்பை வெளிப்படுத்தினார்கள். நீரை.மகேந்திரன் தொகுத்து எழுதியவை.**

*** 'உடன்பிறப்பே' என்பது தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளின் வரலாற்றைச் சொல்வதாக அமைந்திருந்தது. நீரை.மகேந்திரன், ந.வினோத்குமார், விஷ்ணுராஜ், கௌதம் ஆகியோரால் எழுதப்பட்டவை.**

*** பத்திரிகையாளர் கோவி லெனின் எழுதி கி.சொக்கலிங்கத்தின் ஓவியத்தால் இடம் பெற்ற 'திராவிடத்தால் வாழ்கிறோம்' என்ற படக்கதை தினந்தோறும் 'முரசொலி' கடைசிப் பக்கத்தில் வெளியாகி வருகிறது. இதன் இரண்டு தொகுப்புகள்.**

இவை அனைத்தையும் 'முத்தமிழறிஞர் பதிப்பகம்' சார்பில் புத்தகங்களாகக் கொண்டு வந்துள்ளார் இளைஞரணிச் செயலாளரும் மாண்புமிகு அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள் சனவரி 2 அன்று இந்த புத்தகங்களை வெளியிட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் நின்று நிலைபெறக் காரணம், அதன் அடிப்படைக் கொள்கைகளே. அரசியல் இயக்கமாக – தேர்தல் களத்தில் பங்கெடுக்கும் இயக்கமாகவே இருந்தாலும் தனது அடிப்படைக் கொள்கையை வென்றெடுக்கவே தேர்தல் அரசியல் என்பதில் உறுதியாக இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். அதுதான் 75 ஆண்டுகளாக கழகத்தைக் காத்து வருகிறது. தமிழின எதிரிகளுக்கு கழகத்தைப் பார்த்து கோபமும் பொறாமையும் ஏற்படுவதற்குக் காரணமும் இந்தக் கொள்கை உரம்தான்.

காலங்கள் தோறும் இயக்கம் தன்னை புதுப்பித்துக் கொள்கிறது. புதிய சொல் – புதிய பாணி – புதிய வேகம் – புதிய பாதையில் நடைபெறும் இயக்கமாக இதனை தலைவர் கலைஞரும் – அவரது வழித்தடத்தில் செயல்படும் மாண்புமிகு 'திராவிட நாயகன்' – தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள். இளைஞரணிக்கான பாசறைக் கூட்டங்கள் வாயிலாக திராவிடத்தின் தொடர்ச்சியை தொய்வில்லாமல் கொண்டு செலுத்தி வருகிறார் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

**இணைய தள உலகம் பரபரப்பைக் காட்டினாலும் புத்தக உலகம் என்பது என்றென்றும் இணையற்ற உலகம் என்பதால் 'முத்தமிழறிஞர் பேரால் பதிப்பகம் தொடங்கி – அறிவாயுதங்களை கூர்தீட்டி வரும் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயலை போற்றுவோம். வாழ்த்துவோம். பாராட்டுவோம்.**

**அறிவுத் தீ பரவட்டும்!**

**அறியாமை இருள் அகலட்டும்!**

---

எழும்பூர் தொகுதி - 58வது வட்டம்

## 'மக்களுடன் முதல்வர்' சிறப்பு முகாம்!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.9

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.58, ராட்லர் தெரு, எஸ்.ஆர்.மஹாலில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமைத் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தொடங்கி வைத்து, அம்முகாமில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.

இந்த நிகழ்ச்சியில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், 58வது வட்ட அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமல கண்ணன், 58 (அ) வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், எம்.இ.தேவநிதி, நாகராஜ், எழும்பூர் ரமேஷ், கி.புஷ்பராஜ், அ.கவிதா, பிரம்மதேவன், கோமகன், தர்மதுரை, அசினா பேகம், சதீஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---



தலைமைச் செயலகத்தில், நேற்று (08.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2023–ஐ சிறப்பாக நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

நவீன கண்டுபிடிப்புகள் இடம் பெற்றன!

## வெளிநாட்டினரைக் கவர்ந்த தொழில் கண்காட்சி!

### நிரம்பி வழிந்த அரங்கம்!

சென்னை, ஜன. 9 -

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரமாண்ட தொழில் கண்காட்சியில் ஏராளமான நவீன கண்டுபிடிப்புகள் இடம் பெற்றிருந்ததால் கண்காட்சி வெளிநாட்டினரை வெகுவாக கவர்ந்தது.

**தொழில் கண்காட்சி**

சென்னையில் நேற்று முன்தினம் தொடங்கிய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டையொட்டி மிக பிரமாண்டமான தொழில் கண்காட்சிக்கும் தமிழக அரசு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த கண்காட்சியில் மின்சார வாகனங்கள், அதற்கான 'சார்ஜிங் ஸ்டேஷன்', செல்போன் உதிரி பாகங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக கார், வேளாண்மைக்கு பயன்படுத்தப்படும் டிரோன் உள்ளிட்ட ஏராளமான அதிநவீன கண்டுபிடிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

மருத்துவமனைகள், திருமண மண்டபங்கள் போன்றவற்றை சுத்தம் செய்யும் எந்திரங்கள், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பயன்படுத்தப்படும் அதிநவீன எந்திரங்கள், மலைகளை குடைந்து சாலை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவிகள் என புதிய கண்டுபிடிப்புகள் அனைத்தும் கண்காட்சியில் இடம் பெற்றது.

**வெளிநாட்டினர் பாராட்டு**

தமிழக அரசின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்டுள்ள புத்தொழில் நிறுவனங்களும் தங்களது கண்டுபிடிப்புகளை கண்காட்சியில் காட்சிப்படுத்தி இருந்தன.

இந்த புத்தொழில் குறித்து வெளிநாட்டைச் சேர்ந்த தொழிலதிபர்களுக்கு புத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோர் விளக்கி கூறினர்.

புதிய சிந்தனைகளுடன் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள புத்தொழிலுக்கு வெளிநாட்டினர் பாராட்டு தெரிவித்தனர்.

**நிரம்பி வழிந்த கூட்டம்**

அதேபோன்று புத்தொழில் தொடங்குவது குறித்து தமிழகத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள், இளைஞர்கள், கல்லூரி மாணவர்களுக்கு புத்தொழில் நிறுவன அதிகாரிகள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

புத்தொழில் தொடங்க தமிழக அரசு அளித்துவரும் ஆதரவு, நிதி உதவி குறித்து கண்காட்சியில் விளக்கப்பட்டது.

தமிழக அரசின் சார்பில் சிட்கோ உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் 90 அரங்குகளும் இடம் பெற்றிருந்தன.

அனைத்து ரக துப்பாக்கிகளும் அடங்கிய அரங்கமும் கண்காட்சியில் இடம்பெற்றது. இந்த அரங்கத்தில் வெவ்வேறு வகையான துப்பாக்கிகள் குறித்தும், அதன் செயல்பாடுகள் குறித்தும் நிறுவனத்தினர் விளக்கி கூறினர். இந்த அரங்கத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

**பிரமாண்டம்**

பிளாஸ்டிக் பாட்டில்களை மறுசுழற்சி செய்து உருவாக்கப்பட்ட பனியன், ஜாக்கெட், பர்ஸ் உள்ளிட்ட பொருட்களும் கண்காட்சியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.

வெளிநாட்டினர், தொழில் முனைவோர், கல்லூரி மாணவர்கள் என அத்தனை பேரையும் கவரும் வகையில் இந்த தொழில் கண்காட்சி பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைவதால்

## தொழில் வளாகங்கள் அதிக அளவில் உருவாகும்!

### இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் தகவல்!



சென்னை, ஜன. 9 -

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன் பட்டினம் ராக்கெட் ஏவுதளம் அமைவதன் மூலம், அந்தப் பகுதியில் தொழில் வளாகங்கள் அதிக அளவு உருவாகும் என்று இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் தெரிவித்தார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது. அதன் ஓர் அங்கமாக, ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கிறிஸ்டோபர். இஸ்ரோ தலைவர் எஸ். சோமநாத்திடம் சில கேள்விகளை முன்வைத்தார். அதற்கு பதிலளித்த சோமநாத் பேசியதாவது:

குலசேகரன் பட்டினத்தில் அமைக்கப்படும் புதிய ஏவுதளம், ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்துக்கு மாற்றானது அல்ல. கூடுதல் ஏவுதளமாக அமைக்கப்படுகிறது.

குலசேகரன்பட்டினம் ஏவுதளத்தால் சிறிய ராக்கெட்களை ஏவுவதற்கு வசதியாக இருக்கும். இதன்மூலம், அந்தப் பகுதியைச் சுற்றிலும் பல தொழில் வளாகங்கள் உருவெடுக்கும்.

ராக்கெட் தயாரித்தலில் தற்போது வருவாய் அதிகம் ஈட்ட இயலாது.

அதே நேரம் செயற்கைக்கோள் தயாரித்தலில் வருவாய் பெற முடியும். செயற்கைக்கோளில் பயன்படுத்தப்படும் பல்வேறு செயல்பாட்டு அமைப்புகளை உருவாக்கும் பணிகளில் தொழில் துறையினர் ஈடுபடலாம் என இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் தெரிவித்தார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு திருவொற்றியூரில்

## அரசுப் பள்ளிகளுக்கு இலக்கிய - பகுத்தறிவு நூல்கள்!

### பி.எஸ்.சைலஸ் தலைமையில்! வி.தியாகராஜன் வழங்கினார்! த.மகிழன் ஏற்பாடு!

சென்னை, ஜன.9-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, பள்ளி - கல்லூரி மாணவ -மாணவியர்களுக்கு இலக்கிய, பகுத்தறிவு நூல்களை வழங்க வேண்டும் என்று சென்னை அன்பகத்தில் நடைபெற்ற மாநில - மாவட்ட இலக்கிய அணி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கழக இலக்கிய அணி மாநில செயலாளர் வி.பி. கலைராஜன், இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்ட கூட்டத்தின் முடிவின்படி, சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர், மாதவரம் சட்டப்பேரவை உறுப்பினர், வழக்கறிஞர் மாதவரம் எஸ்.சுதர்சனம்,

கழக மாநில மீனவர் அணி துணைத்தலைவர் திருவொற்றியூர் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி. சங்கர் வழிகாட்டுதல் படி மாவட்ட இலக்கிய அணி தலைவர் கவிஞர் த.மகிழன் ஏற்பாட்டில், மாவட்டப் பிரதிநிதி பி.எஸ்.சைலஸ் தலைமையில்,

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.தியாகராஜன் திருவொற்றியூரில் அமைந்துள்ள அரசுப் பள்ளிகளுக்கு இலக்கியப் பகுத்தறிவு புத்தகங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்டப் பிரதிநிதி ஜே.பி. சந்தானகிருஷ்ணன், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கு.தமிழ்மணி, இரா.கணேசன், சோட்டு ஜோ.ராஜ்குமார், ஏ.பி.நாகராஜ், பி.எஸ்.என்.எல். ராஜேந்திரன், அன்பு,

காங்கிரஸ் இயக்கத்தை சேர்ந்த பி.விமல்தாஸ், வாழப்பாடி செந்தில், பூங்கவி ராஜேந்திரன், வட சென்னை திராவிடர் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்மாறன், பகுத்தறிவாளர் பேரவை மாவட்ட தலைவர் ஆசைத்தம்பி, அமைப்பாளர் பா.சரவண குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---



காஞ்சிபுரம் மாநகராட்சி பிள்ளையார்பாளையம் பகுதியில், மக்களுடன் முதல்வர் திட்டத்தை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர்கள் கே.திலகர், சு.வெங்கடேசன், கவுன்சிலர் பாலமுருகன், தேவராஜ், குமரவேல், மண்டல குழுத்தலைவர் எஸ்.மோகன் மற்றும் கழக நிர்வாகிகள், மாநகராட்சி ஆணையர், மாநகராட்சி பொறியாளர், மாநகராட்சி உதவி பொறியாளர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# அமலாக்கத்துறை மீது தாக்குதல் : சிந்தனைக்குச் சில....!

மேற்குவங்கத்தில், திரிணாமுல் காங்கிரஸ் பிரமுகர் இல்லத்தை சோதனையிடச் சென்ற அமலாக்கத் துறை அதிகாரிகளை அந்தப் பகுதியைச் சார்ந்த கிராம மக்கள் 200 பேர் சூழ்ந்து தாக்கியுள்ளனர்.

அமலாக்கத் துறையினர் பூட்டை உடைத்து சம்பந்தப்பட்டவர் வீட்டில் நுழைய முயற்சித்த நிலையில் இந்தத் தாக்குதல் நடைபெற்றதாக ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ போன்ற ஏடுகள் ‘தாக்குதலை நடத்தியது அப் பகுதி கிராம மக்கள்’ என்று குறிப்பிட்டிருந்தாலும், மற்றும் சில ஏடுகளில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் தான் சூழ்ந்து வந்து அமலாக்கத்துறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பாதுகாப்புக்கு வந்த மத்திய ஆயுதப்படையும் தாக்குதலுக்கு ஆளானது என்று செய்திகள் வெளி வந்துள்ளன.

சோதனையை எதிர்த்து வந்த கூட்டம் அதிக அளவில் இருந்ததால் என்ன செய்வது என்று தெரியாமல் சோதனைக்கு வந்த அதிகாரிகளும், மத்திய பாதுகாப்புப் படையினரும் அதிர்ச்சியில் உறைந்தனர்! பின்னர் சோதனையைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றனர்!

இந்த நிகழ்வு சாதாரண சட்ட ஒழுங்குப் பிரச்சினை என்று கடந்து செல்லக்கூடிய ஒன்றல்ல; ஜனநாயக நாட்டில், தான்தோன்றித் தனமாக, எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்கிட அரசின் ஏஜென்சிகளைத் தொடர்ந்து பயன்படுத்தும் ஆளும் கட்சியின் போக்குக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் தொடர்ந்து எழுப்பிடும் கண்டனக் குரல்களை அலட்சியப்படுத்தும்




நிலையில் – எழுந்துள்ள கோபக்கனலின் வெளிப்பாடாகவே நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சி பலராலும் கணிக்கப்படுகிறது!

இந்த ஆரம்பம் இப்போது அலட்சியப் படுத்தப்படலாம்; இதற்கு அரசியல் சாயங்கள் பூசப்படலாம்! எதிர்காலத்தில் இன்று சிறு பொறியாக கிளம்பியுள்ள இந்த நிகழ்வு பெருந்தீயாக கொழுந்து விட்டு எரியத் தொடங்கக்கூடும்!. அதன் விளைவாக ஜனநாயகம் தள்ளாடக்கூடும். அதிகாரம், அந்தஸ்து, ஆள், அம்பு, படை வரிசைகள் தங்களிடம் இருப்பதால் ‘தாங்கள் இட்டதே சட்டம்...’ என நினைத்த எத்தனையோ வல்லமைவாய்ந்த சர்வாதிகாரிகள் தங்களுக்கு எதிராக திரண்டெழுந்த மக்கள் சக்தியினை எதிர்கொள்ள இயலாது; ‘துண்டைக் காணோம்; துணியைக் காணோம்’ என்று ஓடிய காட்சிகள், உலக வரலாற்றில் மட்டுமல்ல; இந்திய வரலாற்றிலும் பாடங்களாக இன்றும் காட்சியளிக்கின்றன.

**கடந்தசில காலங்களாக; அதுவும் தேர்தல் நெருங்க, நெருங்க ஒன்றிய ஆளும் கட்சி, தனது அரசியல் எதிரிகளை எதிர்த்து முடக்கிட திட்டமிட்டு, அரசின் ஏஜன்சிகளான அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறை முதலிய**




**வற்றை முடுக்கிவிட்டு, அவை எதிர்க்கட்சியினர் மீது நடத்திடும் பாய்ச்சலை செய்திகளாக பார்த்துக் கொண்டிருக்கின்றனர்; மக்கள்.**

பா.ஜ.க.வுக்கு எதிரணியில் செயல்படும் கட்சிகளின் முன்னோடிகள் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர்! எதிரணியில் செல்வாக்கு மிக்கவர்கள் யார் என்பதை அறிந்து அவர்களை முடக்கிவிட்டால், ‘ஜாம்... ஜாம்...’ என அடுத்த முறையும் ஆட்சியில் ஏறிவிடலாம் என்ற நப்பாசையில் குறிவைத்து பலர்மீது அமலாக்கத் துறை ஏவிவிடப்படுகிறது என்பது சமீபகாலமாக ஏடுகள் ஊடகங்களில் வரும் செய்திகளைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு தெளிவாகவே விளங்கிடும்!.

**அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறை போன்ற அரசின் இயந்திரங்களை பாரதிய ஜனதா அரசு தவறாகத் தனது அரசியலுக்காகப் பயன்படுத்துகிறது என எதிர்க்கட்சிகள் மற்றும் சில பொதுநல ஆர்வலர்கள் கூறியதை எல்லாம் மோடி, அமித்ஷா கூட்டம் காதில் போட்டுக்கொண்டதாகவே தெரியவில்லை; உச்சகட்ட சர்வாதிகாரிகளின் போக்குடன்; அவர்களது நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன!**

தேர்தல் நெருங்க நெருங்க எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் வலுவைச் சிதைக்கும் போக்கை மேற்கொள்ள நினைத்தனர்!

எதிரணியில் மக்களிடம் செல்வாக்குள்ளவர்களை மிரட்டிப் பணிய வைக்க பெரு முயற்சிகளை மேற்கொண்டனர்; பணியாதவர்களை செயல்பட முடியாது முடக்கிடும் செயல்களை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

**கடந்த சில நாட்களாக ஏடுகளில் வரும் செய்திகளைப் படித்தவர்கள், படித்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தெளிவாக ஒரு உண்மை விளங்கிடும். E.D. அதாவது அமலாக்கத்துறை, எதிர்க் கட்சியினர் மீது ஏவிவிடப்பட்டு அது சோதனை என்ற பெயரில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், செல்வாக்குமிக்க பிரமுகர்கள் மீது நடத்திடும் திருவிளையாடல்கள் ஒன்றே, அமலாக்கத் துறை எப்படி பி.ஜே.பி. அரசால் துஷ்பிரயோகப்படுத்தப்படுகிறது என்பதற்கு சான்றுகளாகும்!.**

கடந்தசில மாதங்களில் மட்டும் அமலாக்கத்துறை சோதனையிட்டுள்ள அரசியல் தலைவர்கள் பட்டியலில் ஒரு சிலவற்றைப் பாருங்கள்.

**• டெல்லியில் ஆம் ஆத்மி கட்சியின் முக்கிய பிரமுகரும், அமைச்சருமான ராஜ்குமார் ஆனந்த் இல்லத்திலும் தொடர்புடைய 9 இடங்களிலும் அமலாக்கத்துறை சோதனை!**

**• அதே ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் குல்வந்த் சிங் தொடர்புடைய இடங்களில் சோதனை. மத்திய போலிஸ் படையின் உதவியோடு அமிர்தசரஸ், லூதியானா பகுதிகளிலும் அவரது தொடர்புடைய இடங்களில் சோதனை.**



## சிலந்தி

**• ஜார்கண்ட் அமைச்சர் ராமேஷ்வர் ஓரானின் மகன் ரோகித் ஓரான் இல்லத்தில் சோதனை. (கடந்த ஆகஸ்ட் மாதம்)**

**• அமலாக்கத்துறை கடந்த அக்டோபர் 26 ஆம் தேதி மாநில காங்கிரஸ் தலைவர் கோவிந்த் சிங் டோட்டாசாராவின் ஜெய்ப்பூர் மற்றும் சிக்கார் இல்லங்களில் சோதனை நடத்தியது மட்டுமின்றி, அந்நியச் செலவாணி சட்டப்படி விசாரணை நடத்திட ராஜஸ்தான் முதல்வராக இருந்த அசோக் கெலாட்டின் மகன் வைபவ், அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு வரவேண்டும் என ‘சம்மன்’ அனுப்புகிறது.**

**• மேற்கு வங்க அமைச்சர் ஜோதி பிரியோ மாலிக் தொடர்புடைய இல்லங்களில் சோதனை நடத்துகிறது.**

**• டெல்லியில் ஆம் ஆத்மி சட்டமன்ற உறுப்பினரின் இல்லத்தில் 12 மணி நேரத்துக்குமேல் அமலாக்கத்துறை சோதனை!**

**• முன்னாள் பஞ்சாப் அமைச்சர் பாரத் பூஷன் ஆஷா மற்றும் அவரது நெருங்கிய நண்பர்கள் இல்லங்களில் அமலாக்கத்துறை சோதனை.**




**• மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னாள் அமைச்சரும், தற்போதைய சட்டமன்ற உறுப்பினருமான ஏ.சி.மொய்தீன் மற்றும் சிலரது வீடுகளில் அமலாக்கத் துறை சோதனை. (கடந்த ஆகஸ்ட் மாதம்)**

**• ஹரியானா சட்டமன்ற உறுப்பினர் கோபால்கண்டா மற்றும் அவரது உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் சோதனை. (கடந்த ஆகஸ்ட் 9)**


**• காங்கிரஸ் தலைவர் பிரியங்கா காந்தியின் பெயரும் அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகையில் தாக்கல்.**

**• டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜரி வாலுக்கு அமலாக்கத்துறை சம்மன்.**

**• காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல்காந்திக்கு அமலாக்கத்துறை சம்மன்;**

– கடந்த ஆண்டு அரசின் அமலாக்கத் துறையை தங்கள் அரசியல் ஆட்டத்தில் ஒரு அங்கமாகச் சேர்த்து மோடி கூட்டம் ஆடிய ஆட்டத்தின் சில தகவல்களே மேலே குறிப்பிடப்பட்டவை!

இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் பிரதிநிதிகளாக, தங்களது குரலாகத் தேர்ந்தெடுத்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர்கள் மீது ஒரு நிர்வாக அமைப்பை வைத்து மிரட்டும் போக்கில் செயல்படுவதை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டோர் ஏற்றிட இயலாது!




“நான் தேர்ந்தெடுத்த பிரதிநிதியை களங்கப்படுத்த நீ யார்? – உன் யோக்யதை என்ன?” – என்ற கேள்விகள் மக்கள் மனதில் விஸ்வரூபம் எடுக்கும்போது, மேற்கு வங்கத்தில் நடைபெற்றுள்ள இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுவது இயற்கைதான்! இந்த நிகழ்வு ஏற்புடையதா என்றால் இல்லைதான்! ஆனால் அதே நேரத்தில் இதுவரை இல்லாத இத்தகைய நிகழ்வுகள் ஏற்படக்காரணம் என்ன என்பதை நாம் மட்டுமல்ல; அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை வழிநடத்துவோரும் ஆலோசிக்க வேண்டும்!

மேற்குவங்க நிகழ்வு ஜனநாயகத்துக்குக் கேடுதான்! அந்த நிலை ஏற்படக் காரணம் என்ன என்பதும் ஆராய்ந்திட வேண்டிய ஒன்றுதான்! தங்கள் பிரதிநிதிகள்மீது அரசியல் நோக்குடன் நடத்தப்படும் தாக்குதல்கள் தங்கள்மீது நடத்தப்படும் தாக்குதல்கள் என்ற எண்ணம் மக்கள் மனதில் உருவாகுவது – பின்னர் மிகப்பெரிய உள்நாட்டு யுத்தத்திற்கு (Civil War) வழிவகுத்து விடும்; நாட்டின் அமைதிக்கே ஆபத்தாய் முடிந்து விடும் என்பதை மோடி, அமித்ஷா கூட்டம் உணர வேண்டும்!

**மேற்குவங்கத்தில் நடந்துள்ளது சாதாரண சட்ட-ஒழுங்குப் பிரச்சினை அல்ல; தாங்கள் அவமானப் படுத்தப்படுவதாக எண்ணிடும் மக்களின் உரிமைக்குரல்! இந்த நிலை ஏற்கத் தகாதது மட்டுமல்ல; இந்த நிலை ஏற்படக் காரணமாக உள்ளவைகளும் ஏற்கக் கூடியதல்ல; இதனை உணர்ந்து இனிவரும் காலங்களிலாவது செயல்பட வேண்டும்! ஒன்றியத்தை ஆளுவோர் செய்வார்களா?**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024" நிறைவு விழாவில், எரிசக்தித் துறை சார்பில் ரூ.1,35,157 கோடி முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மேற்கொண்ட முதலீட்டாளர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen சென் நிறுவனத்தின் துணைத் தலைவர் Mr. Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர், வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024" நிறைவு விழாவில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் ரூ.3,79,800 கோடி முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட முதலீட்டாளர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி, ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செய்வாளர் சிவ் தாஸ் மீனா, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த் த்தசுத் துறை செயலாளர் அருண் ராய்ட, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் திரு ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவிர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Mr. qinxue Lee Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர், வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலம் தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

**இந்த முதலீடுகள் மூலம், நேரடி வேலைவாய்ப்பு என்ற வகையில், 14 லட்சத்து 54 ஆயிரத்து 712 நபர்களுக்கும், மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில், 12 லட்சத்து 35 ஆயிரத்து 945 நபர்களுக்கும் என, மொத்தம் 26 லட்சத்து 90 ஆயிரத்து 657 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.**

மேம்பட்ட மின்னணுவியல் உற்பத்தி, பசுமை எரிசக்தி, தோல் அல்லாத காலணிகள், வாகனங்கள் மற்றும் மின் வாகனங்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, தரவு மையங்கள், திறன்மிகு மையங்கள் தகவல் தொழில்நுட்பச் சேவைகள் போன்ற பலதரப்பட்ட துறைகள் மூலமாக இந்த முதலீடுகள் வந்திருக்கிறது.

ஈர்க்கப்பட்டுள்ள மொத்த முதலீடுகளில், உற்பத்தித் துறையில், அதாவது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பாக,

**எங்களுடைய அரசைப் பொருத்தவரைக்கும், நீங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்துப் போடுவதில் இருந்து உங்களுடைய எல்லாச் செயல்களுக்கும் அதாவது நீங்கள் உங்கள் தொழிற்சாலையை முழுமையாக கட்டி முடித்து, உற்பத்தியைத் தொடங்குவதில் இருந்து, அதற்குப் பிறகும்கூட, உங்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்! உங்களுக்குத் தேவையான எல்லா க்ளியரன்சும் சிங்கிள் விண்டோ சிஸ்டம் மூலமாக, விரைந்து வழங்கப்படும் என்று நான் உறுதிகூற விரும்புகிறேன்.**

3 லட்சத்து 79 ஆயிரத்து 809 கோடி ரூபாய் முதலீடுகள், எரிசக்தித் துறை சார்பாக 1 லட்சத்து 35 ஆயிரத்து 157 கோடி ரூபாய் முதலீடுகள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பாக 62 ஆயிரத்து 939 கோடி ரூபாய் முதலீடுகள், தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பாக 22 ஆயிரத்து 130 கோடி ரூபாய் முதலீடுகள், பெருந்தொழிற்சாலைகளுக்கு வலுவான விற்பனையாளர் தளத்தை வழங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பாக 63 ஆயிரத்து 573 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

### 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கு – இந்த ஒப்பந்தங்கள் பெரும் துணை நிற்கும்!

சீரான, பரவலான வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற விதமாக, இந்த முதலீடுகள் எல்லாம், மாநிலம் முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்பட இருக்கிறது. 2030ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாடு ஒன் டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்துக்கு மிக முக்கியப் பங்களிக்கின்ற மாநிலமாகவும் சிறந்திட, பெரும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இந்த இலக்கை விரைவில் அடைந்திட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பெரும் துணை நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

### செமி கண்டக்டர் கொள்கை! வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தும்!

தொலைநோக்குப் பார்வையோடு தொழில் கொள்கைகளை வடிவமைத்து, அதன்மூலம் தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுதான் ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு உகந்த பாதை. 20க்கும் மேற்பட்ட கொள்கைகளை வெளியிட்டு, அந்தத் துறைகளில் உற்பத்தி மட்டுமில்லாமல், ஏற்றுமதியையும் வெகுவாக பெருக்கிடும் வகையில் முதலீடுகளை கணிசமாக ஈர்த்து, அதன்மூலம் வேலைவாய்ப்புகளை வெகுவாக அதிகரித்து வருகிறோம். இதன் தொடர் நடவடிக்கையாகத்தான், தொடக்க விழா நாளில், மின்னணு உற்பத்தி மற்றும் செமி கண்டக்டர் கொள்கையை வெளியிட்டேன். இது, இந்தத் துறைகளில் முதலீடுகளை ஈர்த்து, வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தும்!

மிகப்பெரும் உட்கட்டமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் போது, அதற்கான முதலீடுகள் முழுவதையும் அரசே மேற்கொள்வது கடினம். கூட்டு முயற்சியில், தனியார் துறைகளோடு இணைந்து செயல்படுவதுதான் நடைமுறையில் சாத்தியம். அந்த வகையில், அப்படிப்பட்ட முதலீடுகளை ஈர்க்க, தனியார் மற்றும் அரசுத் துறைகளின் சிறந்த நடைமுறைகளை இணைத்து, பொதுதனியார் கூட்டாண்மைக் கொள்கையையும் (Public – Private Partnership Policy) வெளியிட்டிருக்கிறோம்.

தமிழ்நாடு அரசின் புத்தொழில் மற்றும் புத்தாக்க ஊக்குவிப்பு நிறுவனமான STARTUP தமிழ்நாடு உருவாக்கியுள்ள டேன்ஃபண்ட் மூலம் பன்னாட்டுத் துணிகர முதலீட்டு நிறுவனங்களை (Venture Funds) தமிழ்நாட்டின் புத்தொழில் நிறுவனங்களோடு இணைப்பதற்கான தளம், இன்றைக்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

### ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது!

நமது Startup தமிழ்நாடு, உலகளாவிய புத்தாக்கச் சூழல்களை ஆராயும் தரவு மற்றும் ஆலோசனை நிறுவனமான 'ஸ்டார்ட்அப் ஜினோம்' ஆகியவற்றுக்கிடையே ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் சுமார் 200க்கும் மேற்பட்ட புத்தொழில் துணிகர முதலீட்டாளர்கள், துறை சார்ந்த நிபுணர்களுடனும் புத்தொழில் நிறுவனங்களுடனும் கலந்துரையாடினார்கள். வாங்குவோர் – விற்பனையாளர் சந்திப்பில் 20க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், 500க்கும் மேற்பட்ட உள்நாட்டு விற்பனையாளர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொண்டனர். இதன் மூலமாக, ஏற்கனவே, ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாக விளங்குகின்ற தமிழ்நாடு, தன்னுடைய போட்டித்திறனை நன்கு அதிகரிக்க முடியும்.

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை நிறுவனங்களுக்கான விற்பனையாளர் – வாங்குவோர் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்திருந்தோம். வளர்ந்து வரும் இந்தத் துறையை செம்மைப்படுத்தி, இந்தத் துறையை மேலும் வளர்க்க, இப்படியான முயற்சிகள் மிகச் சரியான உத்வேகத்தை எங்களுக்குக் கொடுத்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சியின் மற்றொரு சிறப்பம்சமாக, ஒன்பது பங்காளர் நாடுகள் பன்னாட்டு அரங்கம் அமைத்து, இந்த மாநிலத்தின் மீது தங்களின் ஆழமான மற்றும் நீண்டகால ஈடுபாட்டை வெளிப்படுத்தினார்கள். சிறப்பு அரங்குகள் மூலம் தமிழ்நாட்டின் தொழில் வலிமை மற்றும் பன்முகத்தன்மையை பல்வேறு அரசு நிறுவனங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இந்த மாபெரும் நிகழ்வின்போது நடைபெற்ற வேறு சில முக்கிய நிகழ்வுகளையும் இங்கே குறிப்பிட விரும்புறேன்.

திட்டங்களுக்கான தொடக்க விழாக்கள் மற்றும் அடிக்கல் நாட்டு விழா, துறை மற்றும் நாடுகளுக்கான அரங்குகள், புத்தொழில்களுக்கான களங்கள், பல்வேறு தலைப்பிலான கலந்துரையாடல்கள், அனுபவங்கள் பகிரும் சந்திப்புகள், கண்கவர் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடந்திருக்கிறது. இவை எல்லாம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. இவை எல்லாம் ஆக்கபூர்வமாக நடந்திருக்கிறது.

**இந்த மாநாடு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக அமையும்! தமிழ்நாட்டின் வரலாற்றில் நிச்சயம் இது நினைவு கூரப்படும்! இந்த மாநாட்டினுடைய தனித்துவமும் புதுமைத்துவமும் என்றென்றும் பேசப்படும்!**

### நாளைய உலகத்திற்கு வழிகாட்டும் – முதலீட்டாளர்களின் ஆழமான அனுபவங்கள்!

மாநிலத்தில் உள்ள கல்லூரிகள் மூலமும், "நான் முதல்வன் திட்டம் மூலமும் மாணவர்கள் அதிக அளவில் இந்த மாநாட்டில் பங்கேற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கப்பட்டு இருந்தது. நாளைய உலகத்திற்கு இன்றே வழிகாட்டுகிற வகையில், அவர்கள் இந்த பெரும் முதலீட்டாளர்களின் ஆழமான அனுபவங்களைக் கேட்டறிந்தது, தமக்கான பாதையை வகுத்திட அவர்களுக்கு இது பெரிதும் உதவும். சுமார் இருபதாயிரம் பிரதிநிதிகள் மற்றும் 39 லட்சம் மாணவர்கள், இதில் எல்லாம் கலந்து கொண்டு பயனடைந்துள்ளார்கள்.

Our partner countries, have contributed to make the Global Investors Meet a grand success. I also thank the Diplomatic community for their co operation.

முக்கியமாக, நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, எங்கள் அரசு மீதும் எங்கள் கொள்கைகளின் மீதும் வைத்திருக்கிற உங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றுவது, எங்களுடைய தலையாய கடமை.

### உற்பத்தியைத் தொடங்கிய பிறகும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம்!

**எங்களுடைய அரசைப் பொருத்தவரைக்கும், நீங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்துப் போடுவதில் இருந்து உங்களுடைய எல்லாச் செயல்களுக்கும் அதாவது நீங்கள் உங்கள் தொழிற்சாலையை முழுமையாக கட்டி முடித்து, உற்பத்தியைத் தொடங்குவதில் இருந்து, அதற்குப் பிறகும்கூட, உங்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்! உங்களுக்குத் தேவையான எல்லா க்ளியரன்சும் சிங்கிள் விண்டோ சிஸ்டம் மூலமாக, விரைந்து வழங்கப்படும் என்று நான் உறுதிகூற விரும்புகிறேன்.**

அதேபோல இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த, தொழில்துறை அமைச்சர் தலைமையில் ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும். அதில் தொழில் துறை அலுவலர்கள், Guidance அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்பார்கள். ஒவ்வொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் தொடர்ந்து கண்காணித்து, அதை ஒரு முழுமையான தொழிற்சாலையாக மாற்றுவதற்கு, அவர்கள் எல்லா முயற்சிகளையும் எடுப்பார்கள்.

### எனது அலுவலகத்தை – எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்!

உங்களுக்கு எந்தத் தருணத்திலும், என்னிடம் ஏதாவது தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால், என்னுடைய அலுவலகத்தை, நீங்கள் எப்போது வேண்டும் என்றாலும் தொடர்பு கொள்ளலாம்! இந்த உறுதிமொழியை நான் தொழிற்துறை அமைச்சர் மற்றும் அரசு அலுவலர்கள் முன்னிலையில் வழங்குகிறேன். அதனால் நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம்.

நிறைவாக, இந்த மாநாட்டில் முதலீடுகள் மேற்கொண்டுள்ள எல்லோருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உலக நாடுகளை தமிழ்நாட்டுக்கு அழைத்து வாருங்கள்!

இதுவரை, இங்கே முதலீடு செய்யாதவர்களும், எங்கள் மாநிலத்தில் முதலீடு செய்ய முன் வாருங்கள் என்று அன்போடு அழைக்கிறேன்! உங்கள் எல்லோரையும் நான் தொழில்முனைவோராக மட்டுமல்ல – தமிழ்நாட்டின் நல்லெண்ணத் தூதுவர்களாகப் பார்க்கிறேன். எனவே, தமிழ்நாட்டை உலகுக்கு அறிமுகம் செய்யுங்கள். உலக நாடுகளை தமிழ்நாட்டுக்கு அழைத்து வாருங்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### மாநிலத்தின் வலுவான தொழில் சூழலமைப்பு - மனித வளத்தை உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தும் வகையில் நடந்த சிறப்பான மாநாடு!

# உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் - 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## “நீடித்த – நிலையான வளர்ச்சியின் மூலம் முதலீட்டாளர்களுக்கும் – தமிழ்நாட்டு மக்களுக்கும் பயனளிக்கும்!” எனப் பாராட்டு!

**சென்னை, ஜன 9-**

**‘உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட முதலீடுகள், பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்க வழிவகுக்கும்!’ என்றும், ‘நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சியின் மூலம் முதலீட்டாளர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் பயனளிக்கக் கூடியதாக இந்த மாநாடு அமைந்துள்ளது’ என்று தொழில் துறையினரும், பன்னாட்டு பிரதிநிதிகளும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.**

‘தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024’ குறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024, ஜனவரி 7 - 8 ஆகிய இரு தினங்களில், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டினை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2024) தொடங்கி வைத்து, தொடக்க உரை ஆற்றினார். ஒன்றிய அரசின், வர்த்தகம் மற்றும் தொழில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் பியுஷ் கோயல் அவர்கள் சிறப்பு விருந்தினராக இம்மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்து கொண்டார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இம்மாநாட்டின் தொடக்க விழா மற்றும் நிறைவு விழாவில் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

### தலைமைத்துவம் - நீடித்த நிலைத் தன்மை!

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தினை 2030-ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒரு இலட்சிய இலக்கினை நிர்ணயித்துள்ளார்கள். இதன் பொருட்டு, கடந்த இரண்டரை ஆண்டுகளாகவே சிறந்து விளங்கும் முதலீட்டுச் சூழலை மேம்படுத்தும் வகையிலும், மாநிலத்தின் வலுவான, தொழில் சூழலமைப்பு மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் மனிதவளத்தை, உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தும் வகையிலும், இம்மாநாடு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. தலைமைத்துவம், நீடித்த நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Leadership, Sustainability and Inclusivity) என்ற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இம்மாநாடு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்சு, ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தாய்பெய் பொருளாதார மற்றும் கலாச்சார மையம் (Taipei Economic & Cultural Centre in Chennai - TECC) ஆகியவை சர்வதேச பங்குதாரர்களாக தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட்டன.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் இரண்டு தினங்களில், முன்னெப்போதும் இல்லாத அளவில் 6,64,180 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள், 14,54,712 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு உள்ளிட்ட மொத்தம் 26,90,657 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தும் வகையில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இம்முதலீடுகள் பல்வேறு துறைகளிலிருந்து வரப்பெற்றுள்ளன. குறிப்பாக, மேம்பட்ட மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, பசுமை எரிசக்தி, தோல் அல்லாத காலணிகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் மின் வாகனங்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, தரவு மையங்கள், திறன்மிகு மையங்கள் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் மேற்கொள்ளப்பட்டது. இவை தவிர, பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களும்,குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் தங்கள் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டன. மூலதனங்கள் நிறைந்த (Capital intensive), மற்றும் அதிக அளவிலான வேலை வாய்ப்பு உருவாக்கும் (Employment intensive) துறைகளில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாமின் அவர்கள் நேற்று 8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 நிறைவு விழாவில், தமிழ்நாட்டில் ஸ்டார்ட் அப்களின் வளர்ச்சிப் பாதையை ஊக்குவிப்பதற்கும், இந்தியாவிலும், உலக அளவிலும் உள்ள முதலீட்டு பங்குதாரர்களுக்கு இடையேயான இடைவெளியைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட TANFUND தளத்தை வெளியிட்டார். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், முனைவர் டி. ஆர்.பி ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா. TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.மி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரனீர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர். அயல்நாட்டுத் தூதாக அதிகாரிகள், பல்வேறு முன்பாணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனார்.

இம்மாநாட்டின் முக்கிய முதலீட்டா ளர்களான டாடா பவர் நிறுவனம் (70,800 கோடி ரூபாய்), செம்ப்கார்ப் நிறுவனம் (37,538 கோடி ரூபாய்), அதானி குழுமம் (42,768 கோடி ரூபாய்), வின்ஃபாஸ்ட் நிறுவனம் (16,000 கோடி ரூபாய்), டாடா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் (12,082 கோடி ரூபாய்), JSW நிறுவனம் (12,000 கோடி ரூபாய்), ஹூண்டாய் நிறுவனம் (6,180 கோடி ரூபாய்), TVS நிறுவனம் (5,000 கோடி ரூபாய்), பெகட்ரான் நிறுவனம் (1,000 கோடி ரூபாய்) மற்றும் செயிண்ட் கோபைன் (3,400 கோடி ரூபாய்) போன்ற குறிப்பிட்டத்தக்க நிறுவனங்களின் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் அடங்கும்.

**மாநிலத்தின் பெருந்தொழில்களின் வளர்ச்சி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக 8 துறை சார்ந்த அரங்குகள் மற்றும் தமிழ்நாடு சூழலமைப்பு அரங்கம் என பல்வேறு விதமான அரங்குகள் அமைக்கப்பட்டன. மற்றுமொரு சிறப்பம்சமாக, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், ஜெர்மனி, தென் கொரியா மற்றும் பிரான்சு ஆகிய 7 நாடுகள் தங்களது சர்வதேச அரங்குகளை அமைத்து மாநிலத்துடனான ஆழமான மற்றும் நீண்டகால தொழில் தோழமையை வெளிப்படுத்தின.**

இரண்டு நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6277.27 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 8,676 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஃபர்ஸ்ட் சோலார், குவால்கம் மற்றும்ஃபெங் டே ஆகிய 3 நிறுவனங்களின் திட்டங்களைத் துவக்கி வைத்தார்.2,871 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 20,596 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் கோத்ரெஜ், ஜாங்க் பூ மற்றும் பௌ சென் ஆகிய 3 நிறுவனங்களின் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

### செயல்திட்ட அறிக்கை!

இம்மாநாட்டின் முக்கிய நிகழ்வாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை-2024, பொது - தனியார் கூட்டாண்மைக் கொள்கை மற்றும் 2030-ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை வெளியிட்டார்கள்.

உலகெங்கிலும் இருந்து 150-ற்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளின் முன்னணி வல்லுநர்களையும், தொழில்துறை தலைவர்களையும் அழைத்து பல்வேறு கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வல்லுநர்கள், தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார அமைப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்த தங்கள் நிபுணத்துவ கருத்துக்களையும், நுண்ணறிவுகளையும் பரிமாறிக் கொண்டது சிறப்பம்சமாகும். இம்மாநாட்டில் பல்வேறு தொழில் சார்ந்த தலைப்புகளில் 26 கருத்தரங்குகள் நடைபெற்றன.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயனடையும் வகையில் ஒரு பிரத்யேகவாங்குவோர்-விற்பனையாளர் சந்திப்பும் (Buyer - Seller Meet) நடைபெற்றது. இச்சந்திப்பில், 20-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், உள்நாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொண்டனர்.

தமிழ்நாட்டின் புத்தொழில்களுக்கான நிதி வழங்கும் தளமான TANFUND இணையம் துவைக்கிவைக்கப்பட்டது. தமிழ்நாடு புத்தொழில் அரங்கில் 23 துறைகளைச் சேர்ந்த 41 புத்தொழில் விற்பனையகங்கள் அமையப்பெற்றிருந்தன. இதில் 20 புத்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயல்படுகின்றன மற்றும் 10 நிறுவனங்கள் பெண்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

### நீண்டகால தொழில் தோழமை!

மாநிலத்தின் பெருந்தொழில்களின் வளர்ச்சி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக 8 துறை சார்ந்த அரங்குகள் மற்றும் தமிழ்நாடு சூழலமைப்பு அரங்கம் என பல்வேறு விதமான அரங்குகள் அமைக்கப்பட்டன. மற்றுமொரு சிறப்பம்சமாக, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், ஜெர்மனி, தென் கொரியா மற்றும் பிரான்சு ஆகிய 7 நாடுகள் தங்களது சர்வதேச அரங்குகளை அமைத்து மாநிலத்துடனான ஆழமான மற்றும் நீண்டகால தொழில் தோழமையை வெளிப்படுத்தின.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளை, சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள பெருந் தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் சென்று (Industrial Visits), மாநிலத்தின் சிறப்பான தொழில் சூழல் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இந்த 2 நாட்கள் நடைபெற்ற மாநாட்டில், 30-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், உலகளாவிய நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்கள், முதலீட்டாளர்கள், வெளிநாட்டு தூதர்கள், அரசு மற்றும் தனியார் கல்லூரி மாணவர்கள் உட்பட 20,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**உலகெங்கிலும் இருந்து 150-ற்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளின் முன்னணி வல்லுநர்களையும், தொழில்துறை தலைவர்களையும் அழைத்து பல்வேறு கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வல்லுநர்கள், தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார அமைப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்த தங்கள் நிபுணத்துவ கருத்துக்களையும், நுண்ணறிவுகளையும் பரிமாறிக் கொண்டது சிறப்பம்சமாகும். இம்மாநாட்டில் பல்வேறு தொழில் சார்ந்த தலைப்புகளில் 26 கருத்தரங்குகள் நடைபெற்றன.**

### உலகளாவிய நிறுவனங்களின் தலைவர்கள்!

உலகளாவிய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் உலகின் பல்வேறு நாடுகளின் சிறப்பு விருந்தினர்களான ஜப்பான் நாட்டின் கோச்சி மண்டல ஆளுநர் மேதகு. ஹமதா செய்ஜி அவர்கள், ஜே எஸ் டபிள்யூ ஸ்டீல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சஜ்ஜன் ஜிந்தால், ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் மார்க் விட்மர், டாடா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் ரன்தீர் தாக்கூர், டி.வி.எஸ். நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் வேணு ஸ்ரீநிவாசன், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி நிசாபா கோத்ரெஜ், CII தலைவர் ஆர். தினேஷ், ஏ.பி.மோலர் மேர்ஸ்க் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ரெனி பில்பெடர்சன், ஓலா எலெக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர், பவிஷ் அகர்வால், ஹீண்டாய் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் அன்சூ கிம், பெகட்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சார்லஸ் லின், மிட்சுபிஷி எலெக்ட்ரிக் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் கசுஹிகோ தமூரா, குவால்காம் நிறுவனத்தின் தலைவர் சவி சொய்ன் மற்றும் பலர் தொடக்க விழாவில் பங்கேற்றனர்.

இங்கிலாந்து நாட்டின் அமைச்சர் எச்.இ. லார்டு தாரிக் அகமது அவர்கள், மஹிந்திர குழுமம் நிறுவனத்தின் தலைவர் ஆனந்த் மஹிந்திரா, டாஃபே நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா ஸ்ரீநிவாசன், செயின்ட் கோபேன் ஆசியா பசிபிக் மற்றும் இந்திய பகுதியின் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பி. சந்தானம், ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாட்டின் தலைவர் சங்கர் வானவராயர், பௌ சென் நிறுவனத்தின் துணைத்தலைவர் குங்சூ லீ, டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா ஆகியோர் நிறைவு விழாவில் பங்கேற்றனர்.

மாநிலம் முழுவதும் பெரும்பாலான மக்கள் பயன்பெறும் வகையில் இந்நிகழ்ச்சி நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பல்வேறு அலுவலர்கள் தொழில்துறையினர், குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இந்நிகழ்ச்சியை கண்டுகளிக்க ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 701 கல்லூரிகளில் இந்நிகழ்ச்சிகளை நேரலையில் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு நேரலை ஒளிபரப்பு இணைப்பு அனுப்பப்பட்டதன் விளைவாக மாநாடு நிகழ்ச்சிகளை 39.3 லட்சம் இளைஞர்கள் பார்த்து பயனடைந்துள்ளனர்.

இம்மாநாடு, இதில் கலந்து கொண்ட அனைவரின் சிறப்பான வரவேற்பை பெற்றது. இம்மாநாட்டின் போது ஒப்புக்கொள்ளப்பட்ட முதலீடுகள் பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்க வழிவகுப்பதோடு நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சியின் மூலம் முதலீட்டாளர்களுக்கும் தமிழக மக்களுக்கும் பரஸ்பரம் பயனளிக்கும்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைச் செயலகத்தில் நேற்று (08.01.2024) போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் 2024ஆம் ஆண்டு வரும் பொங்கல் திருநாளை முன்னிட்டு, போக்குவரத்துத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம். நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திரரெட்டி, போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் சண்முகசுந்தரம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகர போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், காவல் துறை, போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசு போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்கள் – குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு

# அரசு இ-சேவை மையத்தில் உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பிக்கும் வசதி!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார்!

சென்னை, ஜன. 9-

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு இசேவை (eSevai) மையம் வழியாக உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பித்தல் வசதி மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் பயணிக்க முன்பதிவு செய்யும் ஆன்லைன் முன்பதிவு திட்டத்தில், குலுக்கல் முறையில் பயணிகளை தேர்வு செய்து பரிசு அளித்தல் ஆகிய திட்டங்கள் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று (08.01.2024) துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி ஒய்வு பெறும் ஒய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம், தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதிப் பொறுப்பாட்சியின் மூலம் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது.

தங்களது உயிர்வாழ் சான்றிதழை, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை, ஓய்வூதியதாரர்கள் பணியாற்றிய போக்குவரத்துக் கழக மண்டல அலுவலகத்திலும் மற்றும் அந்த போக்குவரத்துக் கழக பணிமனையிலும் நேரடியாக சென்று சமர்ப்பித்து வருகிறார்கள்.

ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் வயது முதிர்வினை கருத்தில் கொண்டு வருகின்ற ஜனவரி 2024 முதல் மார்ச் 2024 முடிய ஓய்வூதியதாரர்கள், தமிழ்நாடு அரசின் இசேவை மையத்தில், தங்களது கைரேகையை பதிவு செய்து அதன் மூலம் உயிர்வாழ் சான்றிதழை (Life Certificate) சமர்ப்பிக்கலாம். இனி வருங்காலங்களில் இம்முறையே நடைமுறைப் படுத்தப் படும். இத்திட்டத்தினால் 65498 ஓய்வூதியதாரர்களும், 25420 குடும்ப ஓய்வூதியதாரர்களும் பயன் அடைவார்கள்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொலை தூர பேருந்துகளில், பொதுமக்கள் எவ்வித சிரமுமின்றி பயணம் செய்ய ஏதுவாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வலைதளமான https://www.tnstc.in, செயலி etc., மூலம் பயணச் சீட்டு முன்பதிவு செய்யும் முறை செயல்பட்டு வருகின்றது. நாள் ஒன்றுக்கு சுமார் 19,000 பயணிகள் இத்திட்டத்தின் மூலம் முன்பதிவு செய்து வருகின்றனர்.

வார விடுமுறை நாட்கள் மற்றும் பண்டிகை நாட்களை தவிர்த்து இதர நாட்களில் முன்பதிவு செய்து பயணிகள் எளிதாக பயணம் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு மாதத்திலும் அது போன்ற நாட்களில் பயணிப்பதற்காக, முன்பதிவு செய்யும் பயணிகளில் மூன்று நபர்கள் கணினி மூலம் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று பயணிகளுக்கு தலா ரூ.10,000/ வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினால், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில், வார விடுமுறை நாட்கள் மற்றும் பண்டிகை நாட்களை தவிர்த்து சாதாரண நாட்களில் அதிக பயணியர் முன்பதிவு செய்து பயன் பெறுவர். இத்திட்டம் ஜனவரி 2024 மாதம் முதல் அமல்படுத்தப்படும்.

இத் துவக்க விழாவில், போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர், கே.இளங்கோவன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஓய்வூதிய நிதிப் பொறுப்பாட்சி நிர்வாகி திருமதி. கி.பாமா மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி . – அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## எஸ்.திருநாவுக்கரசு எம்.பி . – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை! வானவில் விஜய் தலைமை!

சென்னை, ஜன. 9 -

சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நாளை (10.1.2024 - புதன்கிழமை) மாலை 6 மணிக்கு, அயன்புரம், போர்ச்சியஸ் ரோடு, ஜாயிண்ட் ஆபீஸ் அருகில் நடைபெறுகிறது.

மாவட்டமாணவர்அணி அமைப்பாளர்வழக்கறிஞர் வானவில் விஜய் தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளர், அமைச்சர்பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், பகுதிச் செயலாளர்கள் வே.வாசு, கூ.பீ.ஜெயன் மற்றும் டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சுதாதீனதயாளன், லதா வாசு, ஆர்.வரதன், ஜி. ஜெ.பிரபு, எம்.சுரேஷ் ஆகியோர்முன்னிலைவகிக்கின்றனர்.

எ.வேதா, விக்னேஷ், சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், பல.லோகுபாபு, ஜெ.தங்கராஜ், கு.வேணுகோபால், எஸ்.பாலாஜி, எஸ்.மதனரூபன், அசோக் ஆண்ட்ரூஸ், ம.ஜெயலட்சுமி, ஆ.சுரேஷ் குமார், ஜோஸ்வா லிவிங்ஸ்டன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடுகாங்கிரஸ்கமிட்டிமுன்னாள் தலைவர் எஸ்.திருநாவுக்கரசு எம்.பி, பள்ளிக் கல்வித்துறைஅமைச்சர்அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி பார்வையாளர்வி.கௌதமன்மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்டமாணவர்அணி துணை அமைப்பாளர் எஸ். எஸ்.மணிகண்டன், வில்லிவாக்கம்கிழக்குபகுதிமாணவர் அணி அமைப்பாளர் டி.ஜானகிராமன்ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர் கூட்டம்! புத்தாடைகள் வழங்கல்!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஜன. 9-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் தமிழர் திருநாள் விழா, கழக நிர்வாகிகளுக்கு புத்தாடை வழங்கும் விழா நாளை (10.1.2024 - புதன்கிழமை) காலை 11 மணி அளவில், படப்பையில் உள்ள தில்லை மஹால் திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக அவைத் தலைவர் மு.சுப்பிரமணி தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றி கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகளை வழங்குகிறார்கள்.

இதில் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் வ.நந்தகோபால், இ.மணி, வாசுகி மகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மு.ராஜேந்திரன், மா.பரிமேலழகன் மற்றும் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது. அதுபோது கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திட வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : பொங்கல் விழா, கழக இளைஞரணி இரண்டாவது மாநாடு, வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு, 2024 நாடாளுமன்ற தேர்தல் (பி.எல்.ஏ2)

பாகமுகவர்கள் ஆலோசனை, கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இளைஞர் அணி 2 வது மாநில மாநாட்டை முன்னிட்டு

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் எழுச்சிமிகு இளைஞர் அணி 2வது மாநில மாநாடு, 21.01.2024 அன்று, சேலத்தில் நடைபெறுவதையொட்டி, திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில், இளைஞர் அணி 2வது மாநில மாநாடு ஏற்பாடு தொடர்பாக திருவள்ளூர் மத்திய மாவட்டதிற்கு உட்பட்ட நிர்வாகங்களில் இளைஞர் அணி தொடர் ஆலோசனைக் கூட்டங்கள் இன்று 09/01/2024 முதல் 12/01/2024 வரை கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாட்களில் மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ எனது தலைமையில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

| எண் | தேதி – நேரம் & கிழமை | நிர்வாகம் | செயலாளர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 09 ஜனவரி, காலை 9 (செவ்வாய்) | திருவேற்காடு | என்.இ.கே. மூர்த்தி | நகர செயலாளர், அலுவலகம் திருவேற்காடு |
| 2 | 09 ஜனவரி, மாலை 4 (செவ்வாய்) | பூவை கிழக்கு | கமலேஷ் | ஒன்றிய செயலாளர், அலுவலகம், சென்னீர்குப்பம் |
| 3 | 09 ஜனவரி, மாலை 6 (செவ்வாய்) | திருநின்றவூர் | தி.வை.ரவி | டி.எஸ்.ஜி. பார்ட்டி ஹால், கோமதிபுரம் |
| 4 | 10 ஜனவரி, காலை 10 (புதன்) | ஆவடி தெற்கு | ராஜேந்திரன் | இல்லத்தூர் பிள்ளையார் மண்டபம், கோணாம்பேடு |
| 5 | 10 ஜனவரி, காலை 11 (புதன்) | ஆவடி கிழக்கு | பேபி சேகர் | சந்தோஷ் மண்டபம் திருமுல்லைவாயில் |
| 6 | 10 ஜனவரி, மாலை 5 (புதன்) | ஆவடி வடக்கு | நாராயண பிரசாத் | எஸ்.பி.எஸ். பார்ட்டி ஹால், இந்து கல்லூரி |
| 7 | 10 ஜனவரி, மாலை 6 (புதன்) | ஆவடி மேற்கு | பொன் விஜயன் | பகுதி செயலாளர் அலுவலகம், ஐ.ஏ.எஃப். சாலை. |
| 8 | 11 ஜனவரி, காலை 10 (வியாழன்) | பூவை மேற்கு | தேசிங்கு | சி.எம்.ஆர். மஹால், கூடப்பாக்கம் |
| 9 | 11 ஜனவரி, காலை 11 (வியாழன்) | திருமழிசை | முனுசாமி | அண்ணா சமுதாயக் கூடம், காவல்சேரி |
| 10 | 11 ஜனவரி, மாலை 7 (வியாழன்) | பூவை நகரம் | ஜி.ஆர். திருமலை | யாதவா மண்டபம், செட்டி தெரு, பூவிருந்தவல்லி |
| 11 | 12 ஜனவரி, காலை 10 (வெள்ளி) | திருவள்ளூர் மேற்கு | ஜெயசீலன் | ஆர்.எம். ஹவுஸ், காக்களூர் |
| 12 | 12 ஜனவரி, காலை 11 (வெள்ளி) | திருவள்ளூர் வடக்கு | புஜ்ஜி ராமகிருஷ்ணன் | ஆர்.எம். ஹவுஸ், காக்களூர் |
| 13 | 12 ஜனவரி, மாலை 4 (வெள்ளி) | திருவள்ளூர் கிழக்கு | பிரேம் ஆனந்த் | டி.கே.சி. மஹால், வேப்பம்பட்டு |
| 14 | 12 ஜனவரி, மாலை 6 (வெள்ளி) | எல்லாபுரம் மத்தியம் | தங்கம் முரளி | ஒன்றிய செயலாளர், அலுவலகம், வாணியன்சத்திரம் |

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணாசாமி, திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபால், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், மாநகர அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் மற்றும் இக்கூட்டத்தில் மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.**

செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

# புழல் நீர் சுத்திகரிப்பு நிலைய உந்து குழாய் இணைப்புப் பணிகள்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, ஜன.9-

புழல் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் பிரதான உந்து குழாயில் இணைப்புப் பணிகள் ஜி.என்.டி. சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 10.01.2024 அன்று நண்பகல் 12.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மண்டலம்-3, 4 மற்றும் 6க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

இது குறித்து சென்னை குடிநீர் வாரியம் தகவல் வருமாறு:-

புழல் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் பிரதான உந்து குழாய் இணைப்புப் பணிகள் ஜி.என்.டி. சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 10.01.2024 அன்று நண்பகல் 12.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மண்டலம்-3 (மாதவரம்), மண்டலம்-4 (தண்டையார் பேட்டை) மற்றும் மண்டலம்-6 (திரு.வி.க நகர்)க்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் - 3 (மாதவரம்) - தணிகாசலம் நகர், புக்ராஜ் நகர்.

மண்டலம் - 4 (தண்டையார்பேட்டை) - முத்தமிழ் நகர், கவியரசு கண்ணதாசன் நகர், எருக்கஞ்சேரி, சர்மா நகர், வியாசர்பாடி, கொடுங்கையூர், பி.வி. காலனி.

மண்டலம் - 6 (திரு.வி.க. நகர்) - கன்னிகாபுரம்.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக் கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.




எழும்பூர் தொகுதி, வார்டு எண்.58, ராட்லர் தெரு, எஸ்.ஆர்.மஹாலில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமைத் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தொடங்கி வைத்து, அம்முகாமில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார். உடன் ஜெ.விஜயகுமார், வெ.மருதன், மா.காந்தி, கமலகண்ணன், எல்.சுகுமாரன், சிலம்பரசன், எம்.இ.தேவநிதி, நாகராஜ், எழும்பூர் ரமேஷ், கி.புஷ்பராஜ், அ.கவிதா, பிரம்ம தேவன், கோமகன், தர்மதுரை, அசினா பேகம், சதீஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



திருவண்ணாமலை மாவட்டம்,ஆரணி வட்டம்,மொழுகம்பூண்டி கிராமத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதர இயக்கம் ஈ.பி.சி.ஆர்.பி. எஸ்.கனிமொழி, எஸ்.மோகனா ஏற்பாட்டில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் பங்கேற்று கலைநிகழ்சிகள் மற்றும் கோலப்போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கு பரிசு பொருட்களை வழங்கி வாழ்த்தினார். சங்க மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், ஊராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி பரந்தாமன், நகர்மன்ற உறுப்பினர் அரவிந்தன், மகளிர் திட்ட மேலாளர் அருள்மொழி, இளமதி, புஷ்பலதா, சென்னை மாவட்ட சங்க பொருளாளர் சி.ஐ.டி.நகர் ஆர்.சீனிவாசன், தையல் பயிற்சி ஆசிரியர் பிரேமா ஆகியோர் பங்கேற்றனர்.

## ‘உடன்பிறப்பே!’ என தமது வெண்கலக் குரலால் விளித்து

# தொண்டர்களையெல்லாம் கட்டிப்போட்டவர் கலைஞர்!

## `இசையாய் கலைஞர்’ நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!

**சென்னை, ஜன. 9 -**

**‘உடன்பிறப்பே’ என்னும் தன் வெண்கலக் குரலால் தொண்டர்களை எல்லாம் கட்டிப் போட்டவர் கலைஞர்!” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, ‘கலைஞர் - கலைஞர்’ குழுவின் சார்பில் ‘இசையாய் கலைஞர் என்ற நிகழ்ச்சியில் குழுவின் தலைவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் - கலைஞர் குழு சார்பில் `இசையாய் கலைஞர்’என்ற நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று (8.1.2024) மாலை நடைபெற்றது.

இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பேசியதாவது:

“இந்த நிகழ்விற்கு வருகை தந்துள்ள கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அண்ணன் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அண்ணன் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் பி.கே.சேகர்பாபு

“கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, ‘கலைஞர் - கலைஞர்’ விழாக் குழுவின் சார்பில், நடைபெறுகின்ற ‘இசையாய் கலைஞர்’ நிகழ்ச்சியில் வரவேற்புரை வழங்குவதில் ‘கலைஞர் - கலைஞர் குழு’ வின் தலைவர் என்கிற வகையில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக அரசு ஒரு புறமும் - தி.மு.கழகம் இன்னொருபுறமும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.

**மக்கள் நலன் சார்ந்த நிகழ்ச்சிகள்!**

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு ஓராண்டு முழுவதும் மக்களுக்கு பயனுள்ள வகையில் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்கள் கட்டளையின் படி கடந்த ஜூன் மாதம் தொடங்கி ஏராளமான மக்கள் நலன் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கின்றோம்.

முக்கியமாக, அரசு சார்பில், 250 கோடி ரூபாய் செலவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரில் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறக்கப்பட்டுள்ளது. அதேபோல, 250 கோடி ரூபாய் மதிப்பில் சென்னை கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை திறக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் நூற்றாண்டில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ எனும் மகத்தான திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. .

இதுமட்டுமல்ல, இதழாளர் கலைஞர், எழுத்தாளர் கலைஞர், கலைஞர் கலைஞர், சமூகநீதிக் காவலர் கலைஞர், பண்பாட்டுப் பாசறை கலைஞர், ஏழைப்பங்காளர் கலைஞர், சட்டமன்ற நாயகர் கலைஞர், பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர்,

நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர், நிறுவனங்களின் நாயகர் கலைஞர், தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர், தமிழ்த் தாயின் தவப்புதல்வன் கலைஞர் என 10க்கும் மேற்பட்ட குழுக்கள் உருவாக்கப்பட்டு அந்த குழுக்களின் சார்பில், ஏராளமான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.01.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு "கலைஞர் கலைஞர்" குழுவின் சார்பில் நடைபெற்ற "இசையாய் கலைஞர்" என்ற மெல்லிசை நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, விழாப் பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், ஆர். காந்தி, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர். மு. மகேஷ் குமார், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதி, திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன், திரையுலக கலைஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதேபோல, தி.மு.கழகத்தின் சார்பில், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளை நடத்த நம் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். எங்களுடைய இளைஞர் அணிக்கு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், சட்டமன்ற தொகுதிக்கு ஒன்று எனும் விதத்தில் கலைஞர் பெயரில் கலைஞர் நூலகம் அமைத்தல் - கலைஞர் நூற்றாண்டு மாரத்தான் போட்டிகள் - கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகளை நடத்துமாறு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள்.

**15 சட்டமன்றத் தொகுதிகளில் கலைஞர் நூலகங்கள்!**

நாங்கள் ஏற்கனவே இந்த மூன்று மாதங்களில், இளைஞர் அணி சார்பில், 15 கலைஞர் நூலகங்களை தமிழ்நாட்டில் உள்ள 15 சட்டமன்றத் தொகுதிகளில் திறந்திருக்கிறோம். அதற்கு இளைஞர் அணி தம்பிமார்களுக்கு இந்த நேரத்தில் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய ஒன்றியத்திலேயே வேறு யாருக்கும் இல்லாத வகையில், கலைஞர் அவர்களுக்கு ஏராளமான முகங்கள் உண்டு. பத்திரிகையாளர் - எழுத்தாளர் - அரசியல் மேதை - திரைக்கதை வசனகர்த்தா என ஏராளமான முகங்கள் உண்டு.

அதில் மிக முக்கியமான ஒரு முகம்தான், அவருக்கு இசை மீது உள்ள ஆர்வம். இசை மீதும் - இசைக் கலைஞர்கள் மீதும் கலைஞர் அவர்களுக்கு தனிப்பிரியம் உண்டு. எனவே தான் ‘இசையாய் கலைஞர்’ என்ற இந்த நிகழ்ச்சியை நடத்துவது என்று எங்களின் கலைஞர் - கலைஞர் குழு சார்பில் முடிவெடுத்து சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறோம்.

மனித உணர்வுகளில் இயல்பாய் கலந்திருப்பது கலை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அவனையும் அறியாமல் ஒரு கலையுணர்வு இருக்கும் என்று சொல்வார்கள்.

அதே மாதிரிதான், தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழனின் நினைவிலும் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்டிப்பாக நிறைந்திருப்பார்கள். இந்த நிகழ்ச்சிக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பு என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. ‘இசையாய் கலைஞர்’ என்பது மிகமிக பொருத்தமான தலைப்பு.

**இயக்குநர் கரு.பழனியப்பன்!**

அதேபோல, இயக்குநர் சகோதரர் கரு.பழனியப்பன் அவர்கள் இன்றைக்கு சிறப்புரை வழங்கவுள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தனது 20ஆவது வயதில் முதல் நாடகத்தை எழுதினார்கள். அந்த நாடகத்தின் பெயர் `பழனியப்பன்’ அன்றைக்கு கலைஞர் அவர்களின் பழனியப்பனுக்கு என்ன வரவேற்பு இருந்ததோ அதே வரவேற்பு இங்கிருக்கும் நம் இயக்குநர் பழனியப்பனுக்கும் கிடைத்து வருகிறது. சகோதரர் அவர்கள் பல மேடைகளில் பலமுறை கலந்து கொண்டு உரை நிகழ்த்திவருகிறார்கள். அவர் இன்னும் கறுப்பு சிவப்பு வேட்டி மட்டும்தான் கட்டவில்லை.

எனக்கு இதற்கு முன்பெல்லாம் புத்தகம் படிக்கும் பழக்கமில்லை. இதைச் சொல்வதில் எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை. கோவிட் காலத்தில் எல்லோரும் வீட்டில் அடங்கி இருந்தோம். அப்போதுதான் புத்தகங்கள் அதிகம் வாசித்தேன். இயக்குநர் கரு பழனியப்பன் நிறைய புத்தகங்கள் தந்து வாசிக்கச் சொல்வார்.

கலைஞர் அவர்களை மேடைகளில் நிருபராக பார்த்த பழனியப்பன் அவர்கள், பல முறை அதை மேடையில் சொல்லி இருக்கிறார். மதுரையில் ஒரு மாநாட்டில் ஒரு பத்திரிகையாளராக செய்தியாளராக நெருங்கிப் பழகியதைச் சொல்லி இருக்கிறார். இன்றைக்கு கலைஞரின் சாதனைகளை பட்டி தொட்டியெங்கும் கொண்டு சேர்த்து வருகிறார்.

முக்கியமாக கழக இளைஞர் அணி முன்னெடுக்கும் பணிகளில் தொடர்ந்து கை கோர்த்து செயல்பட்டு வருகிறார். ‘பொய்ப் பெட்டி’ நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார். சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் ‘கலைஞர் நடமாடும் நூலக’த்தை திறந்து வைத்த போது, நம்முடன் இணைந்து அந்த நிகழ்வில் பங்கேற்றார். சகோதரர் கரு. பழனியப்பன் அவர்களை இந்த நிகழ்வுக்கு வருக வருகவென வரவேற்கிறேன்.

**கவிஞர் யுகபாரதி**

அதேபோல கவிஞர் யுகபாரதி அவர்களும் இங்கு சிறப்புரையாற்ற உள்ளார்கள். கலைஞர் அவர்களின் 90 ஆவது பிறந்த நாளின் போது, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் ஏற்பாட்டில் 90 கவிஞர்கள் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்தினார்கள். அப்போது, யுகபாரதி அவர்கள் அவர் எழுதிய `நேற்றைய காற்று’புத்தகத்தை கலைஞர் அவர்களுக்கு பரிசாக கொடுத்தார்கள்.

அந்த புத்தகத்தை வாங்கிக்கொண்ட கலைஞர் அவர்கள், இது என்ன புத்தகம் என்று கேட்கிறார். பாடலாசிரியர்களை பற்றிய புத்தகம் என்று யுகபாரதி சொல்கிறார்.

உடனே, ‘இதில் நானிருக்கிறேனா’ என்று கலைஞர் அவர்கள் கேட்கிறார். ‘நீங்க இல்லாமலா?’ என்று பதில் சொல்கிறார் யுகபாரதி. இதை யுகபாரதி அவர்கள் பல இடங்களில் நினைவுபடுத்தி இருக்கிறார். ‘அவர் இல்லாத புத்தகத்தை அவரிடம் சென்று கொடுக்க முடியுமா?’ என்றும் கேட்கிறார்.

**கலைஞரின் பல முகங்கள் பற்றிய பல புத்தகங்கள்!**

அரசியல் வித்தகர் கலைஞர் எழுத்தாளர் கலைஞர் - பத்திரிகையாளர் கலைஞர் - வசனகர்த்தா கலைஞர் - முதல்வர் கலைஞர் என கலைஞரின் பல முகங்களை பற்றி பல புத்தகங்கள் வந்திருக்கின்றன.

ஆனால் ஒரு, பாடலாசிரியர் கலைஞரைப் பற்றி ‘நேற்றைய காற்று’ புத்தகத்தில் இடம்பெறச் செய்தவர் சகோதரர் யுகபாரதி. எனக்கும் அவர் நிறைய பாடல்கள் எழுதி இருக்கிறார். நான் பாடவில்லை அவரின் பாடலுக்கு வாயசைத்து இருக்கிறேன். நிறைய ஹிட் பாடல்களை எனக்குக் கொடுத்திருக்கிறார். அவருக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறுகிறேன்.

இசையாய் கலைஞர்! இசைக்கு என்னென்ன குணங்கள் இருக்கிறதோ, அந்த குணங்கள் அனைத்தையும் கலைஞர் அவர்களிடமும் நம்மால் பார்க்க முடியும். மனிதனின் உணர்வுகளோடு உரையாடும் வல்லமை இசைக்கு உண்டு. அந்த ஆற்றல் கலைஞர் அவர்களின் இலக்கியத்துக்கு உண்டு.

ஒரு மனிதனை உணர்ச்சிப் பெருக்கால் வெகுண்டெழச் செய்யும் வல்லமை இசைக்கு உண்டு. அந்த ஆற்றல் கலைஞர் அவர்களின் ஒவ்வொரு எழுத்துக்கும் உண்டு. ஒடுக்கப்பட்ட மக்கள், உழைக்கும் பாட்டாளி மக்கள் தாங்கள்படும் துயரை இசையின் மூலமாகவே வெளிப்படுத்தினார்கள். அவர்களின் துயரைப் போக்க தனது பேனாவால் போரிட்டவர் கலைஞர் அவர்கள்.

காயம் பட்டவர்களுக்கு
மருந்து போட்டவர் கலைஞர்!

காயம்பட்ட மனதை இசை ஆற்றும். அதுபோல், சமுதாய இழிவால் காயம்பட்டிருந்த மக்களுக்கு தனது எழுத்தாலும் அரசியலாலும் மருந்துப் போட்டவர் கலைஞர் அவர்கள். மகிழ்ச்சியில் உங்களை இசை துள்ள வைக்கும். கலைஞர் அவர்களின் முகம் பார்த்தாலே நம் உடன்பிறப்புகள் துள்ளி குதிப்பார்கள்.

ஒவ்வொரு காலகட்டத்திற்கு ஏற்ப இசை பரிணாம வளர்ச்சியும், மாற்றமும் அடையும். அதேபோல், கையெழுத்துப் பிரதியாக முரசொலியைத் தொடங்கி, ட்விட்டர் காலம் வரை மாற்றத்தை உள்வாங்கி வளர்ந்தவர் கலைஞர் அவர்கள்.

இசைக்கு நல்ல குரல்வளம் தேவை. ஏறத்தாழ 80 ஆண்டுகள் தமிழர்களை ஆட்கொண்டது ‘உடன்பிறப்பே’என்றழைத்த கலைஞர் அவர்களின் வெண்கலக் குரல் தான். எனவே, இசையின் குணங்கள் அனைத்தையும் தனக்குள்ளே பெற்றவர் தான் நமது கலைஞர் அவர்கள். எனவே தான், இசையாய் கலைஞர் என்னும் தலைப்பு எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது. இசை எங்கும் நிறைந்திருப்பதைப் போல, உலகம் முழுவதும் கலைஞர் அவர்கள் எங்கும் நிறைந்திருக்கிறார்.

இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வரவேற்புரை வழங்கும் வாய்ப்பை எனக்கு அளித்த ‘கலைஞர் - கலைஞர்’ குழுவுக்கு எனது நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு இது போல பலநிகழ்ச்சிகளையும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அதைத்தொடர்ந்து கவிஞர் யுகபாரதி, திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன் இருவரும் கலைஞரின் பாடல்கள் குறித்து உரையாற்றினர். , தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் விஜயா தாயன்பன் நன்றியுரையாற்றினார்.

அதன்பிறகு இசையமைப்பாளர் தாயன்பனின் ‘பல்லவி இசைக்குழு’வின் சார்பில் கலைஞரின் திரைப்படங்களில் இடம்பெற்ற பாடல்கள் பாடப்பட்டன. அந்த இசை நிகழ்ச்சியை கவிஞர் நெல்லை ஜெயந்தா தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், இராணிப்பேட்டை ஆர்.காந்தி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, கலைஞர் கலைஞர் குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் எம்.எஸ்.சண்முகம் ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலர்,

மேயர் ப்ரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், தாயகம் கவி, அரவிந்த்ரமேஷ், மயிலை வேலு, காரம்பாக்கம் கணபதி, ஜெ.கருணாநிதி, கே.பி.சங்கர், ஐட்ரீம் மூர்த்தி, எபினேசர், பிரபாகரராஜா, துணை மேயர் மகேஷ்குமார், மாவட்ட செயலாளர்கள் சிற்றரசு, இளைய அருணா, மகளிர் ஆணைய தலைவர் குமரி விஜயா, இசைப் பள்ளிகளுக்கான கலையியர் அறிவுரைஞர் ஜாஹிர் உசேன், இளைஞர் அணி அமைப்பாளர்கள் பிரகாஷ், ராஜா அன்பழகன், லோகேஷ், மதன்குமார், பகுதிக் கழக செயலாளர்கள் உள்பட கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

## திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி தாய் - சேய் நல மருத்துவமனையில்

# ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு நலத்திட்டங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார்!

*சென்னை, ஜன.9-*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில், ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு நலத்திட்டங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.01.2023), சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில், தரம் உயர்த்தப்பட்ட மகப்பேறு மற்றும் சிசு கண்காணிப்பு மென்பொருள் (PICME 3.0) தொடங்கி வைத்து, 6 செவிலியர்களுக்கு மகப்பேறு செவிலிய பயிற்றுநர் சான்றிதழ்கள் வழங்கி, மகப்பேறு செவிலியர் பயிற்சியில் சேர்ந்துள்ள 16 செவிலியர்களுக்கு சேர்க்கை ஆணை வழங்கி, பேறுகாலத்திற்குப்பின் ஏற்படும் இரத்தப்போக்கிற்கான நவீன சிகிச்சை உபகரணங்கள் வழங்கி, 129 சீமாங் நிலையங்கள், 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 39 நகர சுகாதார நிலையங்களுக்குத் தேவையான Crash Cart உபகரணங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் வழங்கினார்.*

*பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழா பேருரையாற்றினர். இதனைத் தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-*

*கடந்த நிதிநிலை அறிக்கையில் சட்டப்பேரவையில் மருத்துவத்துறையின் சார்பில் 110 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட 110 அறிவிப்புகளும் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ச்சியாக செயல்பாட்டிற்கு வந்துக் கொண்டிருக்கிறது. அந்தவகையில் தாய் சேய் நல மேம்பாட்டு திட்டங்கள் தொடர்பாக 4 அறிவிப்புகள் கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அந்த 4 மகப்பேறு திட்டங்களும் இன்று தொடங்கி வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.*

*அறிவிப்பு எண் 43ன்படி, பாதுகாப்பான மகப்பேறு மற்றும் சுகப்பிரசவங்களை ஊக்குவிக்கும் வகையில் மகப்பேறு செவிலியர்கள் வழிநடத்தும் பராமரிப்பு மற்றும் பயிற்சி பிரிவு உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட பயிற்சி பிரிவு அமைப்பை நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதில் சுகப் பிரசவங்களை ஊக்குவிக்கும் வகையில் ஏற்கெனவே கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், யோகா பயிற்றுவித்தல் தொடர்பான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாட்டில் சுகப்பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அந்தநிலையில் இன்னமும் கூடுதலாக சுகப்பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்கின்ற நோக்கில் பராமரிப்பு மற்றும் பயிற்சி பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.*

*அதேபோல் அறிவிப்பு எண் 42 - மகப்பேறு காலத்தில் ஏற்படுகின்ற இரத்த போக்கிற்கு சிகிச்சை அளிப்பதற்கு ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் அதிநவீன உபகரணங்கள் வாங்கித்தரப்பட்டுள்ளது. இது பேருகாலத்திற்கு பின் ஏற்படுகின்ற இரத்தப்போக்கு சிகிச்சைக்கு பெரிய அளவில் உறுதுணையாக இருக்கும். அதேபோல் கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பச்சிளங்குழந்தைகளை கண்காணிக்கும் வகையில் ஆண்டொன்றிற்கு 11 இலட்சம் பிரசவங்கள் ஏற்படுகிறது. அதனை கண்காணிக்கும் வகையில் பச்சிளங்குழந்தைகளை பராமரிக்க மருத்துவ சேவைகளை தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் PICME 3.0 என்கின்ற மென்பொருள் இன்று பயன்பாட்டிற்கு வந்துள்ளது.*

*இந்த PICME 3.0 மென்பொருள் மூலம் தமிழ்நாட்டில் ஏற்படுகிற பிரசவங்கள், மகப்பேறு வசதிகள், தொடர் பராமரிப்பு போன்ற பலவகையான தகவல்களை இந்த மென்பொருள் மூலம் தொடர்ந்து கண்காணிக்க முடியும். அதேபோல் அறிவிப்பு எண் 46ன்படி, 129 ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பு மையங்கள், 395 வட்டார சுகாதார மையங்கள் மற்றும் 39 நகர்ப்புற சுகாதார மையங்களில் சக்கரங்களுடன் கூடிய அடுக்குப் பெட்டகங்கள் (Crash Cart) இன்று வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடுக்குப் பெட்டகங்கள் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் தற்போது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.*

*அதோடு மட்டுமல்லாமல் இம்மருத்துவமனையைப் பொறுத்தவரை மாதம் 750 முதல் 800 பிரசவங்கள் நடைபெறுகிறது. மிகச்சிறந்த மகப்பேறு மருத்துவமனைகளில் ஒன்றான இம்மருத்துவமனை பாரம்பரியமிக்க பழமையான மகப்பேறு மருத்துவமனைகளில் ஒன்றாகும். இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப இத்துறையின் சார்பில் பல்வேறு மருத்துவக்கட்டமைப்புகள் இதில் செய்யப்பட்டு வருகிறது. அந்தவகையில் ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டுமானம் முடிவுற்று இருக்கிறது. விரைவில் அந்த கட்டிடத்தில் மருத்துவ உபகரணங்கள் பொறுத்தப்பட்டவுடன் விரைவில் திறந்து வைக்கப்படும்.*

*அக்கட்டிடத்தில் அறுவை அரங்கங்கள், சிறப்பு வார்டுகள், தீவிர சிகிச்சை பிரிவுகள் என்கின்ற வகையில் மிகப்பெரிய கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு வரும். அதேபோல் ரூ.30 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் இரண்டு அடுக்குகளுடன் பெரிய கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதிலும் இம்மருத்துவமனையின் தரத்தினை உயர்த்திடும் வசதியாக மருத்துவக்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.*

*எனவே கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட நான்கு அறிவிப்புகளும் இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் மேயர் ஆர். பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஷில்பா பிரபாகர் சதீஷ், மரு.தி.சி.செல்வவிநாயகம். மரு.ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன் மோகன், அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு. மீனா, மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரவிந்தன் மற்றும் பலர் பங்கேற்றனர்.*

### உலக முதலீட்டாளர் மாநாடு 2024! முதலமைச்சரின் தொலைநோக்குத் தலைமையில்

# தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் அடுத்த கட்டப் பாய்ச்சல்!

## இரண்டாம் நாள் நிகழ்வில் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை!

சென்னை,ஜன.9-

உலக முதலீட்டார்கள் மாநாட்டில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பேசியதாவது:

நமது திராவிட நாயகன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், தமிழ்நாடு கடந்த இரண்டரை ஆண்டுகளில் மிகப்பெரிய மாற்றத்தை சந்தித்துள்ளது.



ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற தனது லட்சிய கனவை அடைவதற்கு, மாநில பொருளாதாரத்தின் வேர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அறிந்திருந்தார். மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள படித்த இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு புதிய வேலைகளை உருவாக்குவது இந்த இலக்குக்கு முக்கியமானது என்பதிலும் அவர் தெளிவாக இருந்தார். எனவே தமிழ்நாடு முழுவதும் பரவலான வளர்ச்சியே அவரது இலக்காக மாறியது.

தொழில் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த.மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த அடித்தளம் அமைக்கத் தொடங்கியது.

நான் முதல்வன் மற்றும் புதுமைப் பெண் போன்ற திட்டங்களின் மூலம், மாண்புமிகு முதலமைச்சர் நமது இளம் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்துவதை உறுதி செய்தார்

தொழில் துறை நமது முதலமைச்சரின் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானது. அவர் பதவியேற்ற பிறகு அந்த துறைக்காக எடுத்துள்ள பல நடவடிக்கைகள், தமிழ்நாட்டின் முதலீடுகளுக்கு அவர் கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு சான்றாகும். இந்த புதிய முதலீடுகள் இன்று தமிழ்நாட்டுக்கு லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

கடந்த இரண்டு நாட்கள் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான அடுத்த பெரிய பாய்ச்சலுக்கு அடித்தளத்தை அமைத்துள்ளது.

மின்வாகனங்கள், மின் கடத்திகள், செயற்கை நுண்ணறிவு, மேம்பட்ட உற்பத்தி, குவாண்டம் கம்ப்யூட்டிங், பேட்டரி செல் தயாரிப்பு போன்ற துறைகளையும், தோல் அல்லாத பாதணிகள் போன்ற பொது மக்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருவதையும் நாம் பார்க்கிறோம்.

இதை நிறைவேற்ற, மாண்புமிகு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த சில ஆண்டுகளாக நமது தொழில் துறையைச் சார்ந்தவர்களை உலகின் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வருகிறார், மேலும், முதலீடுகளை ஈர்ப்பதற்காக அவர் அண்மையில் ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்குச் சென்றார். அதன் விளைவினை இன்று நீங்கள் காண்கிறீர்கள். , உலகெங்கிலும் உள்ள நாடுகளில் இருந்து இவ்வளவு பெரிய அளவிலான நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.

இந்த தொழில் முதலீட்டாளர் மாநாட்டிற்குப் பிறகு, அடுத்த சில நாட்களில் தொழில் துறையினர் டாவோஸுக்குச் செல்ல இருக்கின்றனர். அதன் பின்னர் ஜனவரி 28 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் எங்களுடன் ஸ்பெயின் நாட்டிற்கு வருகை தர இருக்கிறார். மேலும், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்வதற்கான திட்டங்களும் உள்ளன. நிறைவாக, அமெரிக்காவுக்குப் பயணிக்க உள்ளார்.

முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்த, இந்த இரண்டு நாட்களும் முதலீட்டு எண்ணிக்கையைப் பற்றியது மட்டுமல்ல, தமிழ்நாட்டின் துடிப்பான, திறமையான இளம் பணியாளர்களுக்கு குறிப்பாக நமது பெண்களுக்கு மாநிலம் முழுவதும் வழங்கப்படக்கூடிய உயர்தர வேலைகள் தொடர்பானது.

எனவே, இந்த இரண்டு அற்புதமான நாட்களையும் முதலீட்டாளர்களுக்கும், தமிழ்நாட்டின் சிறுகுறு தொழில் நிறுவனத்தாருக்கும் மிகப்பெரிய வெற்றியாக மாற்றிய உங்கள் அனைவருக்கும் நன்றி. மேலும் இந்த அமர்வுகளில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான இளம் மனங்களுக்கு நன்றி. இது தொழில்முனைவோரின் உண்மையான கொண்டாட்டமாக அமைந்தது.

இதுபோன்ற உலக அளவிலான மாபெரும் நிகழ்வை நடத்த தொழில் துறைக்கு வாய்ப்பளித்ததற்காக நமது முதலமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்பு உரையாற்றினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (08.01.2024), சென்னை, திருவல்லிக்கேனி அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில், மகப்பேறு செவிலியர்கள் பராமரிக்கும் கேறுகாலப் பிரிவினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன்மோகன், அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.மீனா, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரவிந்தன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையம் அருகே 62 ஆவது வட்டம் அருணாச்சலம் தெருவில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் வழங்கினர். அருகில் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் மதன்மோகன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.




# முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பில் வெற்றிகரமாக நடந்த ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு’!






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் ரூ.62,939 கோடி முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட முதலீட்டாளர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற. சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எரிசக்தித் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி, அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர் வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில், பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள Zhong Bu நிறுவனத்தின் தோல் அல்லாத காலணி உற்பத்தி பொருட்கள் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி, அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன்,செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், ஃபீனிக்ஸ் கோத்தாரி நிறுவனத்தின் தலைவர் ஜின்னா ரஃபீக் அஹமத், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள Pou Chen நிறுவனத்தின் தோல் அல்லாத காலணி உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில், விழுப்புரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள Feng Tay நிறுவனத்தின் தோல் அல்லாத காலணி உற்பத்தி தொழிற்சாலையை திறந்து வைத்தார். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இம்மாநாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்பில் ரூ.63,573 கோடி முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை வழங்கினார். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில், திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள டாடா பவர் நிறுவனத்தின் Solar PV தொழிற்சாலை விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” நிறைவு விழாவில், Micosoft DC நிறுவனம் சென்னையில் அதிநவீன தரவு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், மகேந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயின்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா, Pou Chen நிறுவனத்தின் துணைத் தலைவர் Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உலக முதலீட்டாளர்களின்

# முதல் முகவரி தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பெருமிதம்!

சென்னை, ஜன. 9 -

“உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் முதல் நாளே பல வெற்றிகரமான குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நடந்தேறியிருப்பதால் உலக முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு தான்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்து நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

**‘‘தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024–இன் முதல் நாள் பல வெற்றிகரமான, குறிப்பிடத்தக்க நிகழ்வுடன் நடந்தேறியுள்ளது’’ என்றும் ‘‘இன்று மாலை (திங்களன்று மாலை) எனது நிறைவுரையில், இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாடு பெற்றுள்ள மொத்த முதலீடுகளின் மதிப்பை நான் அறிவிக்கவுள்ளேன்’’ என்றும், ‘‘தெற்காசியாவின் முதன்மை மாநிலமாக உயர்ந்து வரும் தமிழ்நாடு தான், உலக முதலீட்டாளர்களின் முதல் முகவரி என்பதே நமது நிலையான செய்தியாக இருந்து வருகிறது’’**

– என்றும் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டுள்ளார்.

## கனமழை எதிரொலி

# காரைக்காலில் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை!

சென்னை, ஜன.9-

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் அநேக இடங்களிலும், வட மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தொடர் கனமழை எதிரொலி மற்றும் நாளை கனமழை எச்சரிக்கை காரணமாக காரைக்காலில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவித்து அம்மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் உத்தரவிட்டுள்ளார்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருச்சி மண்டல மாவட்ட கழகங்கள் மற்றும் புதுச்சேரி – காரைக்கால் மாநிலத்திற்குட்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறை கூட்டம், சென்னை அன்பகத்தில் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் திருமதி.கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை வகித்துத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், கே.எம்.தண்டபாணி, என்.மணிராஜ், ராதாகிருஷ்ணன், இரா. தாமரைச்செல்வன், பி.ஆர்.அருள்மொழி, துணை செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு, தலைமை கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிகொண்டான், பா.சுளோசன், மறைமலை, கவி கணேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். மேலும் இக்கூட்டத்தில் திருச்சி மண்டல மாவட்ட கழகங்கள் மற்றும் புதுச்சேரி காரைக்கால் மாநிலத்திற்குட்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பொங்கல் திருநாளை முன்னிட்டு

# பொதுமக்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல 19,484 பேருந்துகள் இயக்கம்!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜன.9-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 2024 - பொங்கல் திருநாளை முன்னிட்டு, பொது மக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு வசதியாக, 19,484 பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 2024-ஆம் ஆண்டு வரும் பொங்கல் திருநாளை முன்னிட்டு, போக்குவரத்துத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டமானது, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், நேற்று (08/01/2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத்துறையை சார்ந்த அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திரரெட்டி, போக்குவரத்துத் துறை ஆணையர், காவல்துறை உயர் அலுவலர்கள், அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

பொங்கல் திருநாளை முன்னிட்டு, வரும் 12/01/2024 முதல் 14/01/2024 வரையில், சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,100 பேருந்துகளுடன், 4,706 சிறப்புப் பேருந்துகள் என மூன்று நாட்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக, 11,006 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட மூன்று நாட்களுக்கு 8,478 சிறப்பு பேருந்துகள் என மொத்தமாக 19,484 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பொங்கல் திருநாள் முடிந்த பின்னர், பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு, வரும் 16/01/2024 முதல் 18/01/2024 வரையில், தினசரி இயக்கக் கூடிய 2,100 பேருந்துகளுடன், 4,830 சிறப்புப் பேருந்துகளும் மூன்று நாட்களும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 11,130 பேருந்துகள் ஏனைய பிற முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 6,459 சிறப்பு பேருந்துகள் என மொத்தமாக 17,589 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

சென்னையிலிருந்து பின்வரும் பேருந்து நிலையங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படும் (12/01/2024 முதல் 14/01/2024 வரை) மாதவரம் புதிய பேருந்து நிலையம்- பொன்னேரி, கும்மிடிப் பூண்டி, ஊத்துக்கோட்டை மற்றும் செங்குன்றம் வழியாக ஆந்திர மாநிலத்திற்கு செல்லும் பேருந்துகள்.

கலைஞர் கருணாநிதி நகர் மா.போ.கழக பேருந்து நிலையம் - கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் வரை செல்லும் பேருந்துகள்.

தாம்பரம் சானிடோரியம் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் (MEPZ) - திண்டிவனம், விக்கிரவாண்டி, பண்ருட்டி வழியாக கும்பகோணம், தஞ்சாவூர் செல்லும் அனைத்து TNSTC வழித்தட பேருந்துகள் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் நீங்கலாக).

வள்ளுவர் குருகுலம் மேல்நிலைப்பள்ளி பேருந்து நிறுத்தம் - தாம்பரத்திலிருந்து ஒரகடம் வழியாக காஞ்சிபுரம், வேலூர் மற்றும் ஆரணி செல்லும் பேருந்துகள்.

பூவிருந்தவல்லி பைபாஸ் மாநகராட்சி பேருந்து நிறுத்தம் (பூவிருந்தவல்லி மாநகர போக்குவரத்துக் கழக பணிமனை அருகில்) - பூவிருந்தவல்லி வழியாக ஆற்காடு, ஆரணி, வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், காஞ்சிபுரம், செய்யாறு, ஒசூர் மற்றும் திருத்தணி வழியாக திருப்பதி உள்ளிட்ட ஊர்களுக்கு செல்லும் பேருந்துகள்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், கோயம்பேடு - இதர ஊர்களுக்கு செல்லும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த விழுப்புரம்,



மதுரை, கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி கோட்டத்தை சார்ந்த பேருந்துகள் கீழ்கண்ட தட பேருந்துகள் வழக்கம் போல் கோயம்பேடு பேருந்துநிலையத்திலிருந்து இயக்கப்படும்.

மயிலாடுதுறை, நாகப் பட்டினம், வேளாங் கண்ணி, திருச்சி, கரூர், மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், நாகர்கோவில், திண்டிவனம் மார்க்கமாக திருவண்ணாமலை செல்லும் பேருந்துகள், போரூர், சேத்துப்பட்டு, வந்தவாசி, செஞ்சி மார்க்கமாக செல்லும் பேருந்துகள். திண்டிவனம் வழியாக பண்ருட்டி, நெய்வேலி, வடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் செல்லும் பேருந்துகள் மற்றும் திண்டிவனம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், அரியலூர், திட்டக்குடி, செந்துறை, செயங்கொண்டம், காரைக்குடி, புதுக்கோட்டை, திண்டுக்கல், திருப்பூர், பொள்ளாச்சி, இராமநாதபுரம், சேலம், கோயம்புத்தூர் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துத் கழகத்தை சார்ந்த பேருந்துகள் பெங்களூர் மற்றும் ECR மார்க்கமாக இயக்கப்படும் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, வேளாங்கண்ணி.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் (KCBT), கிளாம்பாக்கம் - தேசிய நெடுஞ்சாலை NH-45 வழியாக செல்லும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தை சார்ந்த கீழ்கண்ட தடங்கள்:

திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், நாகர்கோவில், மார்த்தாண்டம், திருவனந்தபுரம், காரைக்குடி, புதுக்கோட்டை, திண்டுக்கல், திருப்பூர், பொள்ளாச்சி, ராமேஸ்வரம், சேலம், கோயம்புத்தூர் மற்றும் எர்ணாகுளம்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் முன்பதிவு செய்யப்பட்டுள்ள பயணிகளுக்கு மட்டுமே கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படும். மற்ற போக்குவரத்துக் கழக பேருந்துகளில் முன்பதிவு செய்த / முன்பதிவு செய்யாத பயணிகளுக்கு மேற்குறிப்பிட்ட 5 பேருந்து நிலையங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படும்.

2024 - பொங்கல் திருநாளுக்கு முன்பு - நாள்தோறும் இயக்கப்படும் பேருந்துகள் 19,484 எண்ணிக்கை ஆகும்.

தேசிய நெடுஞ்சாலை NH-45 வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் புறப்பாடு விவரம்:

30.12.2023-க்கு முன்பு முன்பதிவின் போது அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் கோயம்பேடு, தாம்பரம் மற்றும் பெருங்களத்தூர் பேருந்து நிலையங்களில் இருந்து பயணம் மேற்கொள்ளும் வகையில் திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் திண்டிவனம், விழுப்புரம் மார்க்கமாக இயக்கும் முன்பதிவு செய்திருக்கும் பயணிகள் அதற்கு பதிலாக கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் (KCBT), கிளாம்பாக்கம் சென்றடைந்து, அங்கு தாங்கள் கோயம்பேட்டில் முன்பதிவு செய்த நேரத்திற்கு பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இயக்கப்படும் பிற அரசு போக்குவரத்துக் கழகங்களான விழுப்புரம், கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி பேருந்துகளில் பயணிக்க முன்பதிவு செய்தவர்களும் பிற முன்பதிவு செய்யாத பயணிகளும் விழுப்புரம், திருச்சி மார்க்கமாக பயணிக்க கோயம்பேட்டிற்கு வரவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வழித்தட மாற்றம்**

**கார் மற்றும் இதர வாகனங்கள்**

கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தாம்பரம், பெருங்களத்தூர் வழியாக செல்வதை தவிர்த்து (OMR) திருப்போரூர் - செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளிச் சுற்று சாலை வழியாக செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முன்பதிவு மையங்கள் செயல்படும் இடங்கள் (12/01/2024 முதல் 14/01/2024 வரை (காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை)

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் (KCBT), கிளாம்பாக்கம்-05, கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி.ஆர். பேருந்து நிலையம்-05, MEPZ (தாம்பரம் சானிடோரியம்) -01. ஆக மொத்தம் 11 மையங்களில் முன்பதிவு செய்யப்படும்.

**முன்பதிவு வசதி**

முன்பதிவு செய்து கொள்ள நடைமுறையில் உள்ள இணையதள வசதியான tnstc official app மற்றும் www.tnstc.in போன்ற இணையதளங்கள் மூலமாகவும் முன்பதிவு செய்து கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2024 - பொங்கல் திருநாளுக்கு பின்பு - நாள்தோறும் இயக்கப்படும் மொத்த பேருந்துகள் 11,589 எண்ணிக்கை ஆகும்.

**பயணிகளின் வசதிக்காக 24X7 கட்டுப்பாட்டு அறை**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் இயக்கம் குறித்து புகார் தெரிவிப்பதற்கு ஏதுவாக, 94450 14450, 94450 14436 ஆகிய தொலைபேசி எண்களை (24x7) மணி நேரமும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 1800 425 6151 (Toll Free Number) மற்றும் 044-24749002, 044-26280445, 044-26281611 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதுமட்டுமின்றி, பயணிகளின் நலன் கருதி, கோயம்பேடு பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை (Control Room) 24 மணி நேரமும் செயல்படும்.

மேலும், பேருந்து நிலையங்களுக்கு வருகை தரும் பயணிகள் பேருந்து மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக 20 இடங்களில் தகவல் மையங்கள் (May I Help You) அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சிரமமின்றி பயணிக்க முன்பதிவு வசதியினை பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் பயணம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள்**

பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி.ஆர். பேருந்து நிலையத்திலிருந்து மேற்கூறிய 5 பேருந்து நிலையங்களுக்கு செல்ல ஏதுவாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்படும்.



திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று (08.01.2024) முதல் 10.01.2024 வரை என 3 நாட்கள் மாநிலம் முழுவதும் நடைபெறும் ‘எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி’ என்ற திட்டத்தினை முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. முன்னிலையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பள்ளிக்கல்வித்துறை முதன்மை செயலாளர் ஜெ.குமரகுருபரன் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவொளி, தொடக்க கல்வி இயக்குநர் கண்ணப்பன் முதன்மை கல்வி அலுவலலர் ரவிச்சந்திரன் நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், நகர செயலாளர் ஜி.ஆர்.திருமாலை ஆகியோர் உள்ளனர்.

# ‘கோட் - சூட்’டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மிக அழகாக உள்ளார்!

## வேட்டி – சட்டை அணிந்து வந்த சிங்கப்பூர் தூதர் பாராட்டு!

சென்னை, ஜன. 9 -

சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ‘கோட்–சூட்’ அணிந்து கம்பீரமாக வந்தார். விழா மேடையில் ‘கோட் - சூட்’ டுடன் மிடுக்காக வந்ததும் அரங்கத்தில் இருந்தவர்கள் கைகளை தட்டி ஆரவாரம் செய்தனர்.

பொதுவாக கட்சி மற்றும் அரசு நிகழ்ச்சிகளில் வேட்டி – சட்டை அணிந்தபடியே முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்ச்சியில் அவர் ‘கோட்–சூட்’ அணிந்து இருந்ததால் விழா அரங்கில் பங்கேற்றவர்களின் பார்வை முழுவதும் அவரை நோக்கியே இருந்தது.

இந்த விழாவில் சிங்கப்பூர் தூதரான சைமன் வோங் என்பவரும் பங்கேற்றார்.

அவர் தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி – சட்டை அணிந்தபடி கலந்துகொண்டார்.

பொதுவாக ‘கோட் - சூட்’டுடன் காணப்படும் சிங்கப்பூர் தூதர் வேட்டியுடன் கலந்துகொண்டதை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

இதற்கான காரணத்தையும் சிங்கப்பூர் தூதர் சைமன் வோங்க நிகழ்ச்சியின் போது விளக்கி கூறினார்.

அதாவது, ‘கோட் – சூட்’ உடையில் முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மிக அழகாக உள்ளார்.

அவரை வாழ்த்தும் விதமாக தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி – சட்டை அணிந்து வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு அவர் பேசியதும் அரங்கில் இருந்தவர்கள் கைகளை தட்டி ஆரவாரம் செய்தனர்.

## கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கு: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

# கழக அயலக அணி மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு! ஆர்.எஸ்.பாரதி தலைமை! எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் நாளை (ஜனவரி 10 – புதன்கிழமை) மாலை 3.00 மணி அளவில் சென்னை – ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா “சமூக நீதிப் போரில் திராவிட இயக்கம்” எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

கழக அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (ஜனவரி 10 – புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளுக்கு கழக அயலக அணித் தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார் எம்.பி., வழக்கறிஞர். மனு சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள் சேலம் திருமதி.எஸ்.உமாராணி எம்.சி., விஜயன்.ராமகிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி., முத்துவேல். ராமசாமி, சேகர்.ஜே.மனோகர், குமரி.எ.பாபு வின்பிரெட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இரண்டு நிகழ்வுகளிலும் கழக அயலக அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எம்.எம்.அப்துல்லா எம்.பி.**

செயலாளர், தி.மு.க. அயலக அணி



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி காமராஜர் நகர் அரசு பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ 577 மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கினார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார். மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி. நாராயண பிரசாத். மாநகராட்சி செயலாளர் சன்.பிரகாஷ் மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு. எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், பகுதி செயலாளர் நாராயணபிரசாத் கவுன்சிலர் சரளா தலைமை ஆசிரியர் சு.பிரேமா உதவி தலைமை ஆசிரியர் மா.விஜயலட்சுமி மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! ''கலைஞர் – கலைஞர்'' விழாக் குழு சார்பில்

# “இசையாய் கலைஞர்” - காணொலியோடு கூடிய மெல்லிசை நிகழ்ச்சி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

**சென்னை, ஜன.9-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்ட “கலைஞர் - கலைஞர்” விழாக் குழுவின் “இசையாய் கலைஞர்” காணொலியோடு கூடிய மெல்லிசை நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.**

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் ஜூன் 2023 திங்கள் முதல் ஜூன் 2024 திங்கள் வரை தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.01.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ”கலைஞர்–கலைஞர் குழுவின் சார்பில் நடைபெற்ற ”இசையாய் கலைஞர் என்ற மெல்லிசை நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கலைஞர் கலைஞர் விழாக்குழுவின் துணைத் தலைவர்கள் அமைச்சர்கள் ஆர். காந்தி, மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதி, திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன், திரையுலக கலைஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி ‘தமிழினத் தலைவர்’ கலைஞர் அவர்களை பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையில் இந்த விழாக்கள் அமைய வேண்டும் என்றும், மாதந்தோறும் ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் இந்த விழாக்களை நடத்திட வேண்டும் என்றும், பெரிய அளவிலான விழாக்களாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

மேலும், அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாக அமைய வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி 2.6.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர்

கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டு, அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக ஆற்றிய பணிகள், நிறைவேற்றிய திட்டங்கள் குறித்த குறும்படத்தையும் வெளியிட்டார்.

### 12 குழுக்கள் அமைப்பு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு திறமைகள் கொண்ட பன்முக வித்தகர். அவர் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரின் பரிமாணங்களை போற்றும் வகையில்

இதழாளர் - கலைஞர், எழுத்தாளர் - கலைஞர், கலைஞர் - கலைஞர், சமூக நீதிக் காவலர் - கலைஞர், பண்பாட்டுப்பாசறை–கலைஞர், ஏழைப் பங்காளர் - கலைஞர், சட்டமன்ற நாயகர் - கலைஞர், பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் - கலைஞர், நவீன தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர், நிறுவனங்களின் நாயகர் - கலைஞர், தொலைநோக்குச் சிந்தனையாளர் - கலைஞர், தமிழ்த்தாயின் தவப்புதல்வன் - கலைஞர் ஆகிய தலைப்புகளில் அமைச்சர் பெருமக்கள் தலைமையில் இணைத் தலைவர்கள், உறுப்பினர் செயலர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்கள் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் அமைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் விழாக்கள் நடைபெற்று வருகிறது.

### திரைத்துறையில் சாதனைகளை விளக்கும் “கலைஞர் - கலைஞர்” விழா

திரைத்துறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் புரிந்த சாதனைகளை பறைசாற்றும் வகையில் “கலைஞர் – கலைஞர்” விழாக் குழு அமைக்கப்பட்டு, விழா நடத்தப்பட்டு வருகிறது.

1946ஆம் ஆண்டு ஈரோட்டுச் சிங்கம் தந்தை பெரியார் அவர்களின் குடியரசு ஏட்டின் துணையாசிரியராகப் பணிபுரிந்து பெரியாருடன் ஈரோட்டிலேயே தங்கியிருந்த காலத்தில், கோவை பட்சிராஜா நிறுவனத்திலிருந்து ஏ.எஸ்.ஏ.சாமி அவர்களால் திரைப்படத்திற்கு கதை, வசனம் எழுதிட அழைப்பு, தந்தை பெரியார் அவர்களிடம் அனுமதி பெற்றுக் கோவை சென்று முதன்முதலில் “ராஜகுமாரி” படத்திற்குத் திரைக்கதை வசனம் எழுதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது திரைத்துறை பயணத்தை தொடங்கினார்.

பின்னர், குண்டலகேசி காப்பியத்தின் கதையை அடிப்படையாகக் கொண்டு “மந்திரிகுமாரி” நாடகம் எழுதினார். நாடகத்தின் பெருமை பற்றிக் கேள்விப்பட்டு அதைத் திரைப்படமாகத் தயாரிப்பதற்கு சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் திரு. டி.ஆர்.சுந்தரம் அழைப்பதாக கவிஞர் கா.மு.ஷெரீப் வந்து கூற; அவருடன் சேலத்திற்கு கலைஞர் அவர்கள் சென்றார். மந்திர குமாரி கதையைத் திரைப்படமாக்கிட ஒப்புதல் தந்தார். படம் தயாராகி மாபெரும் வெற்றி கண்டது. அதன் பின்னர், திரையுலகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயர் ஆட்சி புரிந்தது.

“கலைஞர் கதை, வசனம்” என்பது கதாநாயகர்கள் பெயர் வருவதற்கு முன்பாகவே வந்து அவர் புகழ்க்கொடி நாட்டினார். தமிழ்த் திரைப்பட வரலாற்றை மாற்றியமைத்த திரைப்படம் கலைஞர் அவர்கள் திரைக்கதை வசனம் எழுதிய பராசக்தி. பகுத்தறிவு கருத்துக்களை மக்களிடம் பரப்பி, திரையுலகம் காணாத அனல் பறக்கும் வசனங்களைக் கொண்ட படமாக பராசக்தி வரலாறு படைத்தது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திரைக்கதை வசனம் எழுதிய மனோகரா, பூம்புகார், மறக்க முடியுமா போன்ற திரைப்படங்கள் காலத்தை கடந்து இன்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திரைப்படத் துறையில் ஆற்றிய பணிகளின் விவரங்கள்:

கதை எழுதிய திரைப்படங்கள் - 2, வசனம் எழுதிய திரைப்படங்கள் 4, கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள் 13, திரைக்கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள் 19, கதை, திரைக்கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள் 4, வசனம், பாடல் எழுதிய திரைப்படம் - 1, கதை, வசனம் பாடல் எழுதிய திதைப்படங்கள் - 10, திரைக்கதை, வசனம், பாடல் எழுதிய திரைப்படங்கள் 8, கதை, திரைக்கதை, வசனம், பாடல் எழுதிய திரைப்படங்கள் 2, கலைஞர் எழுதிய பாடல்கள் இடம் பெற்ற திரைப்படங்கள் - 21, கலைஞரின் சின்னத்திரைப் பங்களிப்பு 2, மொழிமாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்கள் - 7

இப்படி திரைத்துறையில் பல மகத்தான சாதனைகளை படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு “கலைஞர் - கலைஞர்” குழுவினரால் விழா நடத்தப்பட்டு வருகிறது.

### “இசையாய் கலைஞர்” காணொலியோடு கூடிய மெல்லிசை நிகழ்ச்சி

“கலைஞர் – கலைஞர்” குழுவின் சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (8.1.2024) “இசையாய் கலைஞர்” காணொலியோடு கூடிய மெல்லிசை நிகழ்ச்சி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், கலைஞர்கலைஞர் விழாக் குழுவின் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதிய மந்திரி குமாரி, பராசக்தி, நாம், அம்மையப்பன், ராஜா ராணி, ரங்கோன் ராதா, குறவஞ்சி, காஞ்சித் தலைவன், பூம்புகார், பூமாலை, மறக்க முடியுமா, நெஞ்சுக்கு நீதி, தூக்கு மேடை, வீரன் வேலுத்தம்பி, ஒரே ரத்தம், மக்கள் ஆணையிட்டால், காவலுக்குக் கெட்டிக்காரன், மதுரை மீனாட்சி, கண்ணம்மா, பாசக் கிளிகள், பெண் சிங்கம் போன்ற திரைப்படங்களில் இடம் பெற்ற பாடல்கள் மற்றும் பல்வேறு திரைப்படங்களின் பாடல்கள் காணொலியோடு கூடிய மெல்லிசை நிகழ்ச்சியாக நடைபெற்றது. இந்த மெல்லிசை நிகழ்ச்சியை பல்லவி குழுவினர் நடத்தினர். பாடல்களின் பின்னணியை விளக்கி நிகழ்ச்சியை கவிஞர் நெல்லை ஜெயந்தா அவர்கள் தொகுத்து வழங்கினார்.

### கவிஞர் யுகபாரதி!

இந்நிகழ்ச்சியில் கவிஞர் யுகபாரதி அவர்கள் பேசியபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படத்திற்கு எழுதி இருக்க கூடிய வசனங்கள் என்பது அந்த படத்திற்கான வசனங்கள் அல்ல, நம்முடைய வாழ்க்கைக்கான வசனங்கள் என்பதனால் அவரது ஒவ்வொரு படத்தையும் நாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

திரைப்படத்தில் பாடல்களாக, வசனங்களாக, திரைக்கதையாக எழுதினாரோ அதையெல்லாம் அவரே ஆட்சி பொறுப்புக்கு வந்து நிறைவேற்றக்கூடிய இடத்திற்கும் வரக்கூடிய ஒரு அற்புதமான வாய்ப்பினை காலம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு வழங்கியது. என்பதை விட நமக்கு வழங்கியது என்றுதான் அதைச் சொல்ல வேண்டும்.

### இயக்குநர் கரு.பழனியப்பன்!

திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் அவர்கள் பேசியபோது, உலகில் எந்த தலைவருடைய நூற்றாண்டு விழாவையும் ஒரு ஆண்டு முழுவதும் கொண்டாட முடியாது. ஏன் என்றால், சொல்வதற்கு செய்தி ஒன்றும் இருக்காது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு வசனகர்த்தாவாக ஒரு கூட்டம் நடத்தலாம், பாடலாசிரியராக ஒரு கூட்டம் நடத்தலாம், கதாசிரியராக ஒரு கூட்டம் நடத்தலாம், தயாரிப்பாளராக ஒரு கூட்டம் நடத்தலாம், இது திரைத்துறைக்கு மட்டும். சமூகநிதிக்குகென தனியாகவும், சட்டமன்றத்திற்கு என தனியாகவும், கட்சித் தலைவராக தனியாகவும் இப்படி பல கூட்டங்கள் நடத்தலாம். தனது வாழ்நாளில் பத்திரிகையாளர்களை சந்திக்க தயங்காத ஒரு தலைவர் உண்டு என்றால் அது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கலைஞர் - கலைஞர் விழாக்குழுவின் துணைத் தலைவர்கள் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், கலைஞர்கலைஞர் குழு உறுப்பினர் செயலர்/முதலமைச்சரின் செயலாளர் முனைவர் எம்.எஸ். சண்முகம், திரையுலக கலைஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்த நாளை முன்னிட்டு

## முன்களப் பணியாளர்கள் - வட்டக் கழக நிர்வாகிகளுக்கு நல உதவிகள்!

தலைமை தா.இளைய அருணா! அமைச்சர் பி.கே.சேகர்பாபு - குமரி விஜயகுமார் -கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் மூர்த்தி வழங்குகின்றனர்!

*சென்னை, ஜன. 9-*

*கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழிகருணாநிதி எம்.பி. பிறந்த நாளை முன்னிட்டு முன்களப் பணியாளர் - வட்டக் கழக நிர்வாகிகளுக்கு நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாளை (10.1.2024) மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.*



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றியத்தை சேர்ந்த கழகத்தின் மூத்த முன்னோடி இளைஞர் அணி ஆரம்ப கால உறுப்பினர் மொழிப்போர் தியாகி. கழக அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் மறைந்த எஸ்.என்.குமார் இல்லத்திற்கு சென்று குடும்பத்திற்கு ஆறுதல் கூறி ரூபாய். 2 லட்சம் நிதி உதவியை பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ கிருஷ்ணசாமி வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், ஒன்றிய செயலாளர் கூளூர். எம்ராஜேந்திரன் நிர்வாகிகள் கே.சொக்கலிங்கம். கி.தரணி. சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.கே. சீனிவாசன், எஸ்.சௌந்தரராஜன், ஜெயபாலன் வி.தியாகராஜன், டி.கே. பூவண்ணன் ஆதிகேசவன், ஜெய்சங்கர் , செந்தில்குமார் பிரபு, பாலாஜி, உள்பட மூத்த முன்னோடிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

*இந்நிகழ்ச்சிக்கு சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா. இளைய அருணா தலைமை வகிக்கிறார்.*

*வ.பெ.சுரேஷ், இரா.கருணாநிதி, நா.சண்முகம், வே.சிவகுமார், ஆர்.வெற்றி வீரன், மு.கோபி, எஸ்.ஆர். கமலக்கண்ணன், க. நாகம்மை, வி.தயாளன் முன்னிலை வகிக்கின்றனர்.*

*அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் குமரி விஜயகுமார், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு நல உதவிகளை வழங்குகின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் ஸ்ரீராமுலு, ந.மனோகரன், க. கோவிந்தசாமி, லியோ டி.சுரேஷ், ஜே.கே.நாதன், லயன் எம்.தீனதயாளன், வெ.சத்தியநாராயணன், ப.சோமசுந்தரமூர்த்தி, ரெயின்போ என்.விஜயகுமார், மு.க.பாண்டியன், ஜெ.கௌரீஸ்வரன், பாலா லட்சுமணன், இ.மதிவாணன், ஏ.பாஸ்கர், பி.ஆகிபிரகாஷ், கே.ஜெயசீலன், இ.ரகு, ஏ.சக்திவேல், எம். எம்.செந்தில்குமார், கே. கோபி, ஆர்.வாசு, எஸ். ரமேஷ், எம்.கிருஷ்ணன், ஜெ. குணாளன், பி.ரூபாவதி, எஸ்.சங்கர், கே.தன்ராஜ், பி.சி.கோட்டி, எஸ். அசோக், ஏ.சாந்தகுமார், எம்.ஜானகிராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.*

*நிகழ்ச்சி ஏற்பாட்டினை 53வது வார்டு மாமன்ற உறுப்பினர் பா.வேளாங்கன்னி செய்துள்ளார்.*

---

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. முன்னிலை! டி.லோகேஷ் தலைமை!

## சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் வாழ்த்தரங்கம்!

டத்தோ ஸ்ரீ எம்.சரவணன் - நா.ஆண்டியப்பன் - அருள் ராசா நாகேஸ்வரன் சிறப்புரை!

*சென்னை, ஜன. 9-*

*சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் உடன்பிறப்புகள் கொண்டாடும் கலைஞர் நூற்றாண்டு விழா வாழ்த்தரங்கம் நிகழ்ச்சி இன்று ( 9.1.2024 - செவ்வாய்க்கிழமை), மாலை 6.00 மணியளவில், ஹேம் ராஜ் பவன், ஓட்டேரியில் நடைபெறுகிறது.*

*இவ்விழாவிற்கு சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் தலைமை வகிக்கிறார்.*

*அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வழக்கறிஞர் ப.தாயகம் கவி, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், லயன் பி.உதயசங்கர், பி. ஜெ.துளசிங்கம், பெரம்பூர், ஆர்.மகேஷ், நா.துலுக்காணம், எம்.பெரோஸ் கான், கா.ராஜ்முகமது ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஜி.ஜெ. பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, சே.மணிமாறன், பா.பி. தாஸ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.*

*உலக தமிழர்களின் இதயம்! ஒளிதந்த கலைஞரே உதயம் எனும் தலைப்பில் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ஸ்ரீ எம்.சரவணன், சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் நா.ஆண்டியப்பன், சுவிஸ் தமிழ் இலக்கிய நிறுவனர் முனைவர் அருள் ராசா நாகேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ.,*

*மாமன்ற உறுப்பினர்கள் மு.சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்ச்செல்வி சசிகுமார் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்துகொள்கின்றனர்.*

*71 அ வட்ட கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றியுரையாற்றுகிறார்.*



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, மாவட்டப் பிரதிநிதி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் கைக்கன்குப்பம் கு.அருளின் திருவுருவப் படம் திறப்பு நிகழ்வு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி தலைமையில் கழகப் பொருளாளர், நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தி மதுரவாயல் தெற்கு பகுதி கழகத்தின் சார்பில் அன்னாரின் குடும்பத்திற்கு ரூபாய் 5 லட்சம் வைப்புத் தொகைக்கான காசோலையை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, வே.மதியழகன், எஸ். பாரதி எம்.சி, எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, சி.நல்லதம்பி, தமிழ்மாறன், ஜி.ஜான்பீட்டர், எம்.ஆல்பாட், அ.இராமு, கே.பாண்டீஸ்வரி, எம்.முரளி, ஆட்டோ ஆறுமுகம், கண்ணதாசன், ஜெயராமன், பூத்தபேடு பி. ரகு, டி.ராஜேஷ், கே.கார்த்திகேயன், டி.வெங்கடேசன் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. தலைமையில்

# 58-வது வார்டில் மக்கள் குறை தீர்க்கும் முகாம்!

## மண்டலக்குழுத் தலைவர் ஸ்ரீராமுலு துவக்கிவைத்தார்!

சென்னை, ஜன.9-

“மக்களுடன் முதல்வர்” சிறப்பு திட்டமானது பொதுமக்களின் கோரிக்கைகளை 30 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரம் கோவையில் இந்த திட்டத்தை துவக்கி வைத்தார்.

அதன்படி சென்னையில் இத்திட்டமானது சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், தலைவர் சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு 58 ராட்டில் தெருவில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் 58வது வார்டு மாமன்ற உறுப்பினர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 5வது மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், வட்ட செயலாளர்கள் ஆர்.பாபு, வி.விஜயகுமார் கே.எஸ்.எம்.நாதன், மா.வெற்றி வேலன் களரி முத்து, ரசூல், டி.வி.வேலு, எம்.எம். மாறன் ஜெகதீசன், க.பன்னீர்செல்வம், ரவிச்சந்திரன், எஸ்.சரளா, பி.கே. கிருஷ்ணமூர்த்தி, குமார், முரளி, சின்னபொன்னு, ராஜேந்திரன், சூளை குமார், கோபாலகிருஷ்ணன், இனியன், சந்தானம், துரைகலா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஆயிரம் விளக்கு 113 ‘அ’ வட்டம்

# மொழிப்போர் தியாகி வி.நடராஜன் மறைவு !

## நே.சிற்றரசு - டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ. முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, ஜன. 9 -

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 113 -வது “அ” வட்டத்தை சேர்ந்த கழக முன்னோடியும், மொழிப்போர் தியாகியுமான வி.நடராஜன் உடல் நலக் குறைவினால், இராமநாதபுரம் இல்லத்தில் 7.1.2024 அன்று இரவு 11 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவர் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர் ஆவார்.

தகவல் அறிந்து சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் மா.பா. அன்புதுரை, கே.ஏழுமலை ஆகியோர் மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மேலும் கோ.சு.மணி, கே. மலர், வி.எஸ். கலை, எஸ்.எம்.கே. அண்ணாதுரை, சி.பாட்ஷாபாபு, ரவி, மு.வெங்கடேசன், பிரேமா சுரேஷ் எம்.சி., பி.திருமமை எம்.சி., டி.தேவாஜ், பி.மாரி, நானு (எ) ஜெயக்குமார், தேனா எல்.தவமணி, நா.மோ. முரளி, எம்.என்.விஷ்ணு, பாபா சுரேஷ், ஈ.கார்த்திக், க.பச்சையம்மாள், ய.தாஸ், சதாசிவம், டி.ஜெயக்குமார், எல்.ரவி, ச.மன்னார், மு.ராமலிங்கம், கழக சரவணன், ஆர்.செல்வம், ஈ.எஸ்.செல்வம், எம்.டி. மணிபால், ரகு, செந்தில்குமார், சங்கர், தயாளன், தர்மா வெங்கட், வினோத், ஏ.பச்சையப்பன், ஏ.ஆர். மணி, ராஜவடிவேலன், மெடிக்கல் மோகன், ஜம்பு, ஆசை கோபால், ஆட்டோ லோகு, ஆட்டோ சேகர், முகேஷ், எஸ்.கே. முருகன், ஆர். பாலாஜி, கே.ரமேஷ், வி.சரவணன், அமீன் பாபு, த.புவியரசன், தீபக், சி. பச்சையப்பன், எம்.சத்யா, ஆர்.பார்த்திபன், சு.இளையராஜா உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (8.1.2024 ) மாலை 4 மணி அளவில் ஆர்.கே. புரம் இல்லத்தில் இருந்து புறப்பட்டு கண்ணம்மா பேட்டையில் மயானத்தில் இறுதி நிகழ்வு நடைபெற்றது.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய

# நகர - பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.கழக ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் வருகிற 12.01.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் திருவள்ளூர் ஆயில் மில் ஐ.ஆர்.என். திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே. திராவிடபக்தன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல் திட்டகுழு உறுப்பினரும். அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் முன்னிலையிலும் நடைபெற உள்ளது அதுசமயம் தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி. கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர். டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஏ.நாகலிங்கம், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன். சி.ஜெயபாரதி. பா.உதயமலர் பாண்டியன்,எம்.மிதுன் சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு எஸ்.கே.ஆதாம். வி.கிஷோர், மு.சுப்பிரமணியம். பி.இராஜேஸ்வரி இரவிந்திரநாத் ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர் முன்னதாக திருவள்ளூர் நகர கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் வரவேற்பு அளிக்கிறார், மேற்படி கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: சேலத்தில் ஜனவரி 21 ம் தேதி நடைபெற உள்ள இரண்டாவது மாநில இளைஞரணி மாநாடு குறித்து

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் தொகுதி திருவள்ளூர் நகராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பங்கேற்று பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் க. திராவிடபக்தன், நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், துணைத் தலைவர் சி. சு. ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் பி.வி. சுரேந்தரஷா, நகராட்சி பொறியாளர் நடராஜன் ,ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் டி. கே. பாபு, டி. ஆர். திலீபன் , வி. எஸ். நேதாஜி, வழக்கறிஞர் பி. கே. நாகராஜ், ஜி. வேலாயுதம், டி. செல்வகுமார், கு. பிரபாகரன், த.அயூப்அலி, என்.கேசவன், நகர கழக நிர்வாகிகள் டி. எம். இரவி, எம் .பரசுராமன், காஞ்சிப்பாடி பி. சரவணன், கொப்பூர் டி. திலீப் குமார், மாநில தூய்மை பணியாளர் நல வாரிய உறுப்பினர் தி. அரிஷ்குமார் ,ஜி. மோகன், என். பாலகிருஷ்ணன், பா. இராஜி , நகர்மன்ற உறுப்பினர்கள் இரா. விஜயகுமார், ஜி. தாமஸ் என்கிற ராஜ்குமார், சீனிவாசன் ,கமலி மணிகண்டன், தனலட்சுமி சீனிவாசன், விஜயலட்சுமி கண்ணன்,செந்தில், கிளைக் கழக நிர்வாகிகள் ப. முரளி, ஜி .உலகநாதன், பா. நந்தகுமார், என். பாஸ்கரன், செல்லதுரை, சுரேஷ்குமார் உள்ளிட்ட கழக தோழர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்..

தூத்துக்குடியை தொழில் நகரமாக மாற்றும் நடவடிக்கையில் திராவிட மாடல் அரசு!

# இளைய சமுதாயம் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 9-

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் சிறப்பம்சமாக தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக தூத்துக்குடியை அடுத்த கட்ட தொழில் நகரமாக மாற்றும் நடவடிக்கைகளை எடுத்து வரும் திராவிட மாடல் அரசு இளைய சமுதாயம் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

உலக அளவிலான முதலீட்டாளர்களை வரவேற்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. நாட்டில் அதிகப் பொருளாதாரம் கொண்ட 2வது பெரிய மாநிலம் தமிழ்நாடு. பல்வேறு தொழில் பிரிவுகளில் தமிழ்நாடு முதலிடம் வகிக் கிறது. 45 ஆயிரம் தொழிற்சாலைகள் இங்கு இருக்கின்றன. இதன் எண்ணிக்கையையும் முத லீட்டையும் மேலும் பன்மடங்காக அதிகரிப்பதன் மூலம் 2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கான இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ளார். இதற்காக தொழில்துறையில் பல்வேறு பிரிவுகளில் முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்றும் இன்றும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டில் 50 நாடுகளில் இருந்து 450க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள், தமிழ்நாட்டின் முன்னணி தொழிலதிபர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் முதல் நாளிலேயே முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 5.5 லட்சம் கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் மூலம் சுமார் 1 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. தமிழ்நாடு குறைக் கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக்



தினகரன்

பெரும் பாய்ச்சல்

கொள்கை, 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து, க்வால்காம் டிசைன் சென்டர் மற்றும் பஸ்ட் சோலார் நிறுவனங்களின் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, கோத்ரேஜ் நிறுவனத்தின் புதிய திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்த 2 நாள் மாநாட்டில் மூலதனம் நிறைந்த மின்னணு பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் பி.வி. செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகள், ஜவுளி மற்றும் ஆடைகள், காலணிகள் மற்றும் தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் புரிந்துணர்வுகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இந்த மாநாட்டின் மற்றொரு சிறப்பம்சமாக தென்தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக தூத்துக்குடியில் 16 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் 400 ஏக்கரில் வின்பாஸ்ட் தொழிற்சாலை அமைகிறது. வியட்நாமைச் சேர்ந்த பன்னாட்டு மின்வாகன தயாரிப்பு நிறுவனம் தூத்துக்குடி யில் மின்சார கார் மற்றும் மின்சார வாகனங்களுக்கான பேட்டரி தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க உள்ளது. இதன் கட்டுமானம் நடப்பாண்டிலேயே துவங்கும் என்ற அறிவிப்பு தென்மாவட்ட மக்களின் காதில் தேனாக பாய்ந்துள்ளது. துறைமுகம், விமான நிலையம், தரமான 4வழிச்சாலைகள் என போக்குவரத்து வசதிகள் அனைத்துமிருந்தும் தென்மாவட்டங்களில் பெரியளவில் தொழில் முதலீடுகள் ஏதும் வராமலிருந்த நிலையில் திராவிட மாடல் அரசு தூத்துக்குடியை அடுத்தகட்ட தொழில் நகரமாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருவது இளைய சமுதாயம் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே பர்னிச்சர் பூங்கா, விமான நிலைய விரிவாக்கம் போன்ற பணிகள் நடந்து வரும் நிலையில் ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரிப்பதால் இனி தென்மாவட்டங்களில் உள்ள வறண்ட தரிசு நிலங்களெல்லாம் புதிய தொழிற்பூங்காக்களாக மாறும் என்ற நம்பிக்கை ஒளி தோன்றுகிறது. இதற்கு இதுபோன்ற தொழில் முதலீட்டு மாநாடுகள் நிச்சயம் உரமேற்றும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி’ திட்டத்தில் பூவிருந்தவல்லியில் பார்வைத்திறன் குறையுடையோருக்கான பள்ளி!

சென்னை, ஜன. 9 -

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று 08.01.2024 முதல் 10.01.2024 வரை என 3 நாட்கள் மாநிலம் முழுவதும் நடைபெறும் ‘எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி’ என்ற திட்டத்தினை முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி அவர்கள் தலைமையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, பள்ளிக்கல்வித் துறை முதன்மை செயலாளர் ஜெ.குமரகுருபரன் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவொளி, தொடக்க கல்வி இயக்குநர் கண்ணப்பன் முதன்மை கல்வி அலுவலலர் ரவிச்சந்திரன் நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், நகர செயலாளர் ஜி.ஆர்.திருமாலை ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீத்தா வேதநாயகம்
### சனவரி 9 (2019)



கழகக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு, பள்ளிப் பருவத்திலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

புதுச்சேரி மாநிலத்தில், பகுதிச் செயலாளர், துணைத் தலைவர், மாநிலக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுச்சேரி நகர்மன்ற உறுப்பினராக மூன்று முறையும் – சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுச்சேரியில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் – துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஏ. காதர்
### சனவரி 9 (2011)



இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றி வந்த இவர், 1967ஆம் ஆண்டு மண்டபம் நகரக் கழகச் செயலாளராகவும் – 1983ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டக் கழகப் பொருளாளராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்து, இறுதியில் சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

1967ஆம் ஆண்டு மண்டபம் ஊராட்சிமன்றக்குழுத் தலைவராகவும் – 1996ஆம் ஆண்டு இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவராகவும் – 1998ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (08.01.2024), சென்னை. திருவல்லிக்கேனி அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில், ரூ.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடங்களின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன்மோகன், அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.மீனா, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரவிந்தன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (08.01.2024), சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில், 129 சீமாங் நிலையங்கள், 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 39 நகர சுகாதார நிலையங்களுக்குத் தேவையான Crash Cart உபகரணங்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் வழங்கினார். அதனை அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.மீனா பெற்றுக் கொண்டார்கள். இந்நிகழ்வில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) தலைவர் திரு.நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் திரு.மதன்மோகன், சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரவிந்தன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்

### பத்திரப்பதிவுத் துறையில் -அமைச்சரின் பெயரில் ஒவ்வொரு

# ஆவணத்திற்கும் பணம் பெறுவதாகக் கூறப்படுவது பொய்யான குற்றச்சாட்டு!

## அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

சென்னை, ஜன.9

பத்திரப்பதிவுத்துறையில் அமைச்சரின் பெயரில் ஒவ்வொரு ஆவணத்திற்கும் பணம் பெறுவதாக கூறப்படுவது பொய்யான குற்றச்சாட்டு என்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மறுப்பு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பதிவுத்துறையில் நாள்தோறும் நடைபெறும் பதிவுகளில் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை தனியே கையூட்டாகப் பெறப்படுகிறது என்றும் அது துறையின் அமைச்சரின் பெயரில் வசூலிக்கப்படுகிறது என்றும் வேண்டுமென்றே உள்நோக்கம் கொண்டு திரிக்கப்பட்ட ஒரு செய்தி பரப்பப்பட்டு வருகிறது.

பதிவுத்துறையைப் பொருத்த மட்டில் ஒரு நாளைக்கு ஏறக்குறைய பத்தாயிரம் ஆவணங்கள் பதியப்படுகின்றன. ஆவணங்களைப் பதிவுக்கு கொண்டு வரும் பொதுமக்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் ஆன்லைன் வழியாகவே செலுத்த வேண்டும். அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் ஆன்லைன் வழியாக மட்டுமே செலுத்தப்பட முடியும் என்ற வகையில் பதிவுத்துறையானது முற்றிலும் கணினிமயமாக்கப்பட்டு இதற்கென விரிவான மற்றும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசுக்கு குறைந்த தொகைகள் செலுத்தப்பட வேண்டியிருந்தால் ஏடிஎம் கார்டு ஸ்வைப் பண்ணும் வகையில் அவற்றிற்கென PoS மெஷின்கள் ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன. எனவே பதிவுக்கு வரும் பொதுமக்கள் தங்கள் கைகளில் பணத்தைக் கொண்டு வர தேவையில்லை. மேலும் ஆவணங்கள் பதிவு செய்கையில் இடைத்தரகர்களின் தலையீடு இருக்கக்கூடாது என்பதும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இடைத்தரகர்களால் பதிவு பொதுமக்கள் ஏமாற்றப்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு சார்பதிவாளர் அலுவலகங்களுக்குள் இடைத்தரகர்களோ ஆவண எழுத்தர்களோ அனுமதிக்கப்படக்கூடாது என்று கண்டிப்பான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



ஆவண எழுத்தர்கள் வசூலிக்கும் கட்டணங்களுக்காக தனியே பில் வழங்க வேண்டும் எனவும் அந்த பில்லையும் ஓர் ஆவணமாக இணைக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை சரியாக பின்பற்றாத மற்றும் பொதுமக்களிடம் அதிக பணம் பெறுவதாக குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் ஆவண எழுத்தர்களின் உரிமங்கள் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு ரத்து செய்யப்பட்டு வருகிறது.

மேலும் தமிழ்நாட்டில் இருக்கும் 581 சார்பதிவாளர் அலுவலகங்களிலும் சிசிடிவி கேமரா வைக்கப்பட்டு மண்டல துணை பதிவுத்துறை தலைவர் அலுவலகங்களிலிருந்தும் சென்னையில் இருக்கும் பதிவு துறை தலைவர் அலுவலகத்திலிருந்தும் நேரடியாகக் கண்காணிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பதிவுக்கு வரும் ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக கையூட்டு கொடுக்கப்பட கூடாது என்பது பொதுமக்களுக்கு அவ்வப்போது வலியுறுத்தப்பட்டு வருகிறது. பதிவுக்காக சார் பதிவாளர்கள் கையூட்டு பெறும் நிகழ்வுகள் கவனத்திற்கு வருகையில் அதன் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும் ஊழல் தடுப்பு துறையினரின் தொடர் கண்காணிப்பின் கீழ் இருந்து வருகின்றன. அத்துறையினரால் அவ்வப்போது சஸ்பெக்டட் ஆஃபீஸர்ஸ் என்று அறிக்கை செய்யப்படும் சார்பதிவாளர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர் அல்லது உரிய ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

பதிவுத்துறை அமைச்சரால் நடத்தப்படும் பதிவுத்துறை பணி குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களில் பொதுமக்களின் நலனுக்கு எதிராக சார்பதிவாளர்கள் செயல்படக்கூடாது என்றும் தேவையில்லாமல் பதிவு பொதுமக்கள் காக்க வைக்கப்படக்கூடாது என்றும் பதியப்பட்ட ஆவணங்கள் அன்றன்றே திருப்பித் தரப்பட வேண்டும் என்றும் கையூட்டு பெறுவது போன்ற அழுத்தங்கள் பதிவு பொதுமக்களுக்கு தரப்படக் கூடாது என்றும் கண்டிப்பான அறிவுரைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பதிவுத்துறை சார்ந்த சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து கையூட்டு பெற மாட்டோம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு அமைச்சரால் கோரிக்கை வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் லஞ்சம் கொடுப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் லஞ்ச புகார் குறித்த விவரங்கள் பதிவுத்துறை தலைவருக்கோ அல்லது மண்டல துணை பதிவுத்துறை தலைவர்களுக்கோ அனுப்பப்பட வேண்டும் என்று விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

ஆவணங்களின் பதிவுக்காக பொதுமக்களிடமிருந்து கையூட்டு பெறப்படுவதைத் தவிர்ப்பதற்காக இத்தகைய விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் நிலையில் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை தினமும் பதிவு பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்று கற்பனையான மற்றும் பொய்களால் புனையப்பட்ட செய்தி பரப்பப்படுவது விபரீதமான உள்நோக்கம் கொண்டதாகும். ஆவணங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கும் ஆவணதாரர்களிடமே நேரடியாகக் கேட்டு இது குறித்த உண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

**உண்மைக்கு மாறான தகவல்!**

சமீப காலங்களில் பதிவுத்துறையில் பல சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இந்தியாவின் பிற மாநிலங்கள் தமிழக பதிவுத்துறையை முன்னோடி துறையாக பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பதிவுத்துறையின் அனைத்து நடவடிக்கைகளும் கணினிமயமாக்குதல், 1865 ஆம் ஆண்டு முதலே பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் கணினிப்படுத்துதல் ஆன்லைன் மூலமாகவே கட்டணம் இன்றி வில்லங்க சான்று பார்த்தல், கட்டணம் இன்றி பதிவிறக்கம் செய்தல், அனைத்து கட்டணங்களையும் ஆன்லைன் வழியாகவே செலுத்துதல், ஒரு சில ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரடியாக வராமல் ஆன்லைன் மூலமாகவே பதிவு செய்தல், எல்லாவற்றிற்கும் மேலாக மோசடியாக ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால் அந்த ஆவணங்களை ரத்து செய்யும் அதிகாரத்தை பதிவுத்துறைக்கு வழங்கும் வகையிலான சட்டத்திருத்தத்தை கொண்டு வந்தது மற்றும் மோசடியாக ஆவணங்களைப் பதிவு செய்யும் சார்பதிவாளர்கள் மீதும் அந்த ஆவணங்களை எழுதுவோர் மீதும் குற்றவியல் நடவடிக்கை தொடர்வது போன்ற பல முன்னோடியான சீர்திருத்தங்கள் பதிவுத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நமது அண்டை மாநிலங்களான ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மேற்கு வங்காளம், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் இருந்து அதிகாரிகள் நேரடியாக வந்து தமிழக பதிவுத்துறையின் சீர்திருத்தங்களைப் பார்வையிட்டு தங்கள் மாநிலங்களில் அவற்றை செயல்படுத்த முனையும் வண்ணம் தமிழக அரசின் பதிவுத்துறை மிகப்பெரிய சீர்திருத்தங்களுடனான வளர்ச்சியை அடைந்துள்ளது.

மேலும் 3 ஆண்டுகளுக்கு முன்பாக வருடத்திற்கு ரூபாய்.10,000 கோடி வருவாய் மட்டுமே எட்டி வந்த பதிவுத்துறையில் சமீப காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பல அடிப்படை மாற்றங்களின் காரணமாகவும் பதிவு பொதுமக்களுக்கு பதிவுத்துறையின் மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கையின் காரணமாகவும் கடந்த ஆண்டில் ரூபாய் 17 ஆயிரத்து 297 கோடி வருவாயை பதிவுத்துறை அடையும் வகையில் பதிவுத்துறை பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது. இவ்வாறு பதிவு நடைமுறைகளில் பெரும் சீர்திருத்தங்களோடு பதிவு பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல முன்னோடியான திட்டங்களை பதிவுத்துறை செயல்படுத்தி வரும் நிலையில் பதிவுத்துறையின் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் தினமும் பதியப்படும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை கையூட்டாகப் பெறப்படுகிறது என உண்மைக்கு புறம்பான செய்தி பரப்பப்படுவது முற்றிலும் ஆதாரமற்ற உள்நோக்கம் கொண்ட செயலாகும்.

ஆவணங்களின் பதிவிற்காக அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை தவிர கூடுதலாக பணம் எதுவும் கொடுக்கத் தேவையில்லை என்று ஏற்கனவே தொடர்ந்து வலியுறுத்தி சொல்லப்பட்டு வருவது போலவே தற்போது மீண்டும் அதே கருத்து வலியுறுத்தப்படுகிறது.

பதிவுக்கு வரும் ஆவணங்களுக்காக அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை பதிவுப் பொதுமக்கள் ஆன்லைன் வழியாகவே செலுத்த வேண்டும் என்பதைத் தவிர கூடுதலான எந்த ஒரு தொகையையும் யாருக்கும் கொடுக்க தேவையில்லை. இதையும் மீறி இடைத்தரகர்களோ ஆவண எழுத்தர்களோ அல்லது சார்பதிவாளர்களோ ஆவணப் பதிவிற்காக கையூட்டு கோரினால் இது குறித்து கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொண்டு புகாரைத் தெரிவிக்கலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கையூட்டு தொடர்பான விரிவான புகார்களை நேரடியாகவே பதிவுத்துறை தலைவருக்கோ அல்லது மண்டல துணை பதிவுத்துறை தலைவர்களுக்கோ அல்லது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கோ அனுப்பலாம் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இடைத்தரகர்களோ ஆவண எழுத்தர்களோ அல்லது சார்பதிவாளர்களோ அல்லது அதற்கு மேல்நிலை அலுவலர்களோ பொதுமக்களிடம் ஆவணப் பதிவுக்காக கையூட்டு கேட்டால் இது குறித்த புகார்களை கீழ்கண்ட எண்களில் உடனடியாக தெரிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொதுமக்கள் புகார் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண்கள்: 9498452110, 9498452120, 9498452130.

மேலும், அமைச்சரின் பெயரிலோ அல்லது அதிகாரிகளின் பெயரிலோ ஆவணப்பதிவிற்கு என்று கையூட்டு கேட்டால், இது தொடர்பான புகார்களை ctsec@tn.gov.in என்ற eMail முகவரியில் தகுந்த மேல் நடவடிக்கைக்காக வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் அரசு செயலாளருக்கு நேரடியாக அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (08.01.2024) நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை ஆஸ்திரேலிய கவுன்சில் ஜெனரல் திருமதி சாரா கிர்லெவ் (Ms Sarah Kirlew) மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

### தமிழ்நாட்டில் பரவலான தொழில் வளர்ச்சி!

# முதல்வரின் முயற்சி தொழில் புரட்சிக்கு அடிப்படையாக அமையும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 9 -

‘தினத்தந்தி’ நாளேடு தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு முதல்வரின் முயற்சியால் தமிழ்நாடு ஒரு பரவலான வளர்சியடையும் என்றும், மாநாடு தொழில் புரட்சிக்கு அடிப்படையாக அமையும் என்றும் முதல்வரை பாராட்டியுள்ளது.

அது வருமாறு:

சென்னையில் 2 நாட்கள் நடைபெறும் தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்பட பல நாடுகள் பங்குபெற்றுள்ளன. 450க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் கலந்துகொண்டு இருக்கிறார்கள். முதல்நாளான நேற்று வெளிநாட்டு முன்னணி தொழில் நிறுவனங்களின் பிரதிநிதி களும், நம் நாட்டு தொழில் முனைவோரும் காட்டிய ஆர்வத்தைப் பார்த்தால், தமிழக அரசின் இலக்கான ரூ.5 லட்சம் கோடிக்கான முதலீட்டை தாண்டிவிடும் என்ற நம்பிக்கையை கொடுத்துள்ளது. தொடக்க நிகழ்ச்சியி லேயே ரூ.51 ஆயிரத்து 754 கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இது தமிழ்நாட்டில் நடக்கும் 3வது உலக முதலீட்டாளர்கள் மாநாடாகும். முதல் மாநாடு





ஜெயலலிதா முதல்அமைச்சராக இருந்தபோது 2015ம் ஆண்டு நடந்தது. அப்போது 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.2 லட்சத்து 42 ஆயிரத்து 160 கோடிக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாகவும், 4 லட்சத்து 70 ஆயிரத்து 65 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் பெருமையுடன் அறிவிக்கப்பட்டது. 2வது உலக முதலீட்டாளர்கள் மாநாடு எடப்பாடி பழனிசாமி முதல்அமைச்சராக இருந்தபோது 2019ம் ஆண்டு நடந்தது. அப்போது, 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.3 லட்சத்து 501 கோடி அளவுக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும், 10 லட்சத்து 50 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த இரு மாநாடுகளிலும் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் தொழில் முதலீடுகளாக மாறவில்லையென்றாலும், பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு வந்தவுடன் ஆரம்பத்தில் இருந்தே தொழில் வளர்ச்சிக்கு மிகதீவிர நடவடிக்கை எடுத்தார். முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் துபாய் மற்றும் சில நாடுகளுக்கு நேரடியாக சென்று தொழில்முனைவோரை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான சூழ்நிலைகளை விளக்கிக்கூறி பல முதலீடுகளை கொண்டுவந்தார். இதுபோல, முன்பு தொழில்துறை அமைச்சராக இருந்த அமைச்சர் தங்கம் தென்னரசும், இப்போது அமைச்சராக இருக்கும் டி.ஆர்.பி.ராஜாவும் சீரிய முயற்சிகளை எடுத்தனர். மேலும், முன்பு தொழில்துறை செயலாளர்களாக இருந்த எஸ்.கிருஷ்ணன், முருகானந்தம், இப்போது செயலாளராக இருக்கும் அருண்ராய் ஆகியோர் மிக முனைப்புடன் முயற்சிகளை எடுத்தனர். இவ்வாறு அனைவரும் எடுத்த கூட்டு

முயற்சிகளின் விளைவாக 241 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, ரூ.3 லட்சம் கோடி அளவில் தொழில்முதலீடு ஈர்த்துள்ளன. 4 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. பொதுவாக, இதுவரை எடுத்த முயற்சிகளால், பெரும்பாலும் சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள மாவட்டங்களிலேயே தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. ஆனால், முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலான தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும், அதற்கு இந்த முதலீட்டாளர் மாநாடு வித்திட வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அதன் விளைவாக, தூத்துக்குடியில் வியட்நாம் நாட்டை சேர்ந்த ‘வின்பாஸ்ட்’ நிறுவனம் மின்சார வாகன தொழிற்சாலையை ரூ.16 ஆயிரம் கோடி முதலீட்டில் தொடங்கப்போகிறது. இதன்மூலம் அந்த தொழிற்சாலைக்கு தேவையான உதிரி பாகங்களை தயாரித்து கொடுக்கும் பல சிறிய தொழிற்சாலைகளும் அப்பகுதியில் வரும். இதுபோல, இந்தியாவின் பல முன்னணி தொழில்நிறுவனங் களும், வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டில் பரவலாக தொழில் தொடங்கப் போவதால், இந்த மாநாடு ஒரு தொழில்புரட்சிக்கு அடிப்படையாக அமையும்.

இவ்வாறு ‘தினத்தந்தி’ முதல்வருக்கு புகழாரம் சூட்டியுள்ளது.



தலைமைச் செயலகத்தில் நேற்று (08.01.2024) போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு இசேவை (eSeval) மையம் வழியாக உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பித்தல் வசதி மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் பயணிக்க முன்பதிவு செய்யும் ஆன்லைன் முன்பதிவு திட்டத்தில், குலுக்கல் முறையில் பயணிகளை தேர்வு செய்து பரிசு அளித்தல் ஆகிய திட்டங்களை துவக்கி வைத்தார். உடன் போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திரரெட்டி, மாநகர போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.காசிநாதன் (எ) தமிழரசன்

### சனவரி 9 (2013)



சிறுவயது முதற்கொண்டு கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

மாத்தூர் கிளைக் கழகச் செயலாளராக தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற 21ஆம் தேதி நடைபெறுகின்றது. இதனையடுத்து மாநாடு திடலில் நடைபெறும் பணிகளை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், மாவட்ட செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம் ,வழக்கறிஞர் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ .,டி.எம் .செல்வ கணபதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, முன்னாள் எம்எல்ஏ தமிழ்செல்வன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் , பூலாவரி சேகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில்

# ஐயப்பன் மலர் வழிபாடு நிகழ்ச்சி!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜன.9-

சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில், ஐயப்பன் மலர் வழிபாடு நிகழ்ச்சி ஆன்மிக இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளுடன் இன்று (09.01.2024) மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்.

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பில் திருவிழாக்கள் கொண்டாடப்படுவதோடு மட்டுமல்லாமல் மகாசிவராத்திரி பெருவிழா, நவராத்திரி விழா, பௌர்ணமி திருவிளக்கு பூஜை, ஐயப்பன் மலர் வழிபாடு போன்ற சிறப்பு வழிபாடுகளும் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 2024 ஆம் ஆண்டிற்கான ஐயப்பன் மலர் வழிபாடு இன்று (09.01.2024) மாலை மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் ஆன்மிக சான்றோர்கள் மற்றும் இறையன்பர்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ளது.

இம்மலர் வழிபாட்டினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்து, 40 ஆண்டுகளுக்கு மேலாக சபரிமலைக்கு சென்று வந்த 108 குருசாமிகளை பாராட்டும் வகையில் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, ஐயப்பன் திருவுருவம் பொறித்த வெள்ளி டாலருடன் கூடிய துளசி மாலையை வழங்கி சிறப்பு செய்கின்றார்.

அதனைத் தொடர்ந்து, ஐயப்பனுக்கு சிறப்பு பூஜை மற்றும் தீபாரதனையும், கலைமாமணி வீரமணி அவர்களின் இசை வாரிசு வீரமணிகண்ணன் கோடீஸ்வரன் குழுவினரின் ஐயப்பன் பக்தி பாடல்களும், திருமதி வைஷ்ணவி சுகுமார் குழுவினரின் ஐயப்ப சரித்திரம் என்ற நாட்டிய நாடகமும், அன்னதானமும் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஐயப்ப பக்தர்களும், இறையன்பர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### ஒரகடம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில்

# 4.0 தரத்தில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப மையம்!

### உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகள் பார்வையிட்டனர்!

சென்னை, ஜன.9-

தமிழ்நாட்டில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 07.01.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக நேற்று (08.01.2024) உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவந்த பிரதிநிதிகள் 25 பேர் கொண்ட குழு, தமிழக அரசால் M/s. டாடாடெக்னாலஜி ஸ்லிமிடெட், நிறுவனத்துடன் இணைந்து ரூ.2,877.43 கோடி செலவில் தொழில் 4.0 தரத்தில் அமைக்கப்பட்ட 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒன்றான ஒரகடம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள தொழில் நுட்ப மையத்தினை பார்வையிட்டனர்.

இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் 4.0 தரத்திலான இண்டஸ்ட்டிரியல் ரோபோட்டிக்ஸ், (Industrial Robotics) அட்வான்ஸ்டு சி.என்.சி. ஆப்பரேட்டர் (Advanced CNC Operator), மெக்கானிக் மின்சார வாகனங்கள் (Mechanic Electric Vehicles) மற்றும் மேனுஃபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் அண்டு ஆட்டோமேஷன் (Manufacturing Process Control and Automation) போன்ற 4 தொழிற் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தொழில் நுட்ப மையத்தில் உள்ள இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் மென்பொருட்கள் குறித்தும் அதில் வழங்கப்படும் பயிற்சிகளை குறித்தும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அவர்கள் குழுவினருக்கு எடுத்துரைத்தார்கள்.

இத்தொழில் நுட்ப மையத்தில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை பார்வையிட்டு தொழிற்சாலைகளுக்கு இணையான தரத்தில் உள்ள இயந்திரங்கள், மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்கள் ஆகியவற்றில் பயிற்றுநர்கள் மற்றும் மாணவர்கள் பயிற்சி பெறுவதை கண்டு வருகை புரிந்த குழுவினர் பாராட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், பிரதிநிதிகள் குழுவுடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார்ஜெயந்த், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர், திருமதி எ.சுந்தரவல்லி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை உயர் அதிகாரிகள், வழிகாட்டி நிறுவன (Guidance) துறை அதிகாரிகள் மற்றும் SIPCOT அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### மாதவரம் 17 வது வட்டத்தில்

# மக்களுடன் முதல்வர் குறைதீர்க்கும் முகாம்!

### புழல் எம்.நாராயணன் - ஏ.வி.ஆறுமுகம் - கே.கருணாகரன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 9 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய திட்டம் முன்னெடுப்பில் திராவிட மாடல் அரசு தமிழ்நாடு முழுவதும் மக்களுடன் முதல்வர் என்கின்ற மக்களின் குறைதீர்க்கும் நிகழ்ச்சியை நடத்தி வருகிறது.

மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் எரிசக்தி துறை தமிழ்நாடு மின்சார வாரியம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மாற்றுத் திறனாளிகள் நலத்துறை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை என்று பல் வேறு துறைகளை உள்ளடக்கிய அதிகாரிகள் பொது மக்களிடம் மனுக்களை பெற்று அதற்கு உரிய நேரத்தில் ஒரே இடத்தில் தீர்வு காணும் பொருட்டு நடத்தப்படுகின்ற சிறப்புமிக்க நிகழ்ச்சி ஆகும். இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு முழுவதும் பெருத்த வரவேற்பு ஏற்பட்டு உள்ளது.

அந்த வகையில் மாதவரம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட, 17 வது வட்டம், கொசப்பூர் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி உடற்பயிற்சி கூடத்தில் இந்த முகாம் (8.1.2024) காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

சுமார் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அனைத்து துறைகளின் சார்பாகவும் தங்களது மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வழங்கி அதற்கான ரசீதுகளை பெற்றுக் கொண்டனர். பல மனுக்களின் மீது அதிகாரிகள் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு கண்டனர்.

உடனுக்குடன் காணப்பட்ட இந்த தீர்வு மூலம் அதற்கான ஆணைகளும் வழங்கப்பட்டதால் பொது மக்களிடையே பலத்த வரவேற்பை பெற்றது.

இம்முகாமில் பொதுமக்கள் வழங்கிய மனுக்களை மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன், மண்டலக்குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம், மண்டல அலுவலர் கோவிந்தராஜன், மாதவரம் பால் பண்ணை காவல் நிலைய ஆய்வாளர் வேலுமணி, சென்னை மாநகராட்சி அதிகாரிகள் பிரதீப்குமார், சீனிவாசன், திருமாறன் உள்ளிட்டோர் பெற்றுக் கொண்டு துவக்கி வைத்தனர்.

தனித்தனியாக அமைக்கப்பட்ட மேசைகளில் மனுக்களுக்கான தீர்வுகள் காணும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு நடந்து வந்தது. இதற்கான ஏற்பாடுகளை சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

மேலும் அரசுத்துறை அதிகாரிகள் ஊழியர்கள் என்று பலரும் இந்த முகாமில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு உதவி செய்து பாராட்டை பெற்றனர்.

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் சி.மூர்த்தி, சி.பாலாஜி, எம்.என்.அஜய் தென்னவன், எஸ்.சிவகுமார், கே.சண்முகப்ரியன், அரியலூர் டி.வினோத், நாகராஜ், ராஜ்குமார், விஜயன், தினகரன், முனுசாமி, தினேஷ், சுதர்சன், வில்சன், ஜான்சன், பூபாலன், எம்.மைக்கேல், பி.செந்தில், எம்.கோவிந்தன், வக்கீல் எம்.என்.தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



சென்னை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு 58 ராட்டில் தெருவில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி 58வது வார்டு மாமன்ற உறுப்பினர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 5வது மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், வட்ட செயலாளர்கள் ஆர்.பாபு, வி.விஜயகுமார் கே.எஸ்.எம்.நாதன், மா.வெற்றி வேலன் களரி முத்து, ரசூல், டி.வி.வேலு எம்.எம்.மாறன் ஜெகதீசன், க.பன்னீர்செல்வம், ரவிச்சந்திரன், எஸ்.சரளா, பி.கே.கிருஷ்ணமூர்த்தி, குமார், முரளி, சின்னபொன்னு, ராஜேந்திரன், சூளை குமார், கோபாலகிருஷ்ணன், எல்.எட்வின், இனியன், சந்தானம், துரைகலா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### போக்குவரத்துத் தொழிலாளர்களை காலமெல்லாம் வஞ்சித்த

# அ.தி.மு.க. தற்போது அரசியல் நாடகமாடுகிறது!

### போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான ஆட்சி கழக ஆட்சி!

### தொ.மு.ச. பேரவை மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, ஜன. 9 -

போக்குவரத்துத் தொழிலாளர்களை காலமெல்லாம் வஞ்சித்த அ.தி.மு.க. தற்போது அரசியல் நாடகமாடுகிறது என்றும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் பாதுகாப்பான அரசு கழக அரசு தான் என்றும் தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பதவி உயர்வுகள் கிடைக்காது என்கிற நிலையில் பதவி உயர்வுக்கான பணப் பலன்கள் கிடைக்கின்ற வகையில் நீண்ட கால ஊதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. போக்குவரத்துக் கழகங்களில் செயல் படுத்தப்பட்டு வரும் 14 ஊதிய ஒப்பந்தங்களில் தி.மு.கழக ஆட்சியில் 1989, 1998, 2007, 2010 மற்றும் 2019 போடப்பட்ட ஒப்பந்தங்கள் வரலாற்றுல் சிறப்புமிக்க ஒப்பந்தமாகும்.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊதிய ஒப்பந்தத்தில் இன்றைய முதல்வர் அன்றைய மாநகரத் தந்தை மு.க.ஸ்டாலின் அவர்கள் தொ.மு.ச. பேரவையின் கோரிக்கைக்கு பக்கபலமாக நின்று போக்கு வரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உறுதுணையாக இருந்தார். போக்குவரத்துக் கழகங்களில் இத்திட்டம் 2000 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் வள்ளுவர் கோட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. 30 ஆண்டுகள் பணி முடித்த தொழிலாளர்கள் தாங்கள் பெற்ற அடிப்படை சம்பளத்தில் பாதியை ஓய்வூதியமாக பெற்றனர். கூடுதலாக அகவிலைப் படி, மருத்துவப் படி வழங்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தவுடன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் நடைமுறைபடுத்தப் பட்ட ஓய்வூதியத் திட்டத்தை சாத்தியமில்லா திட்டம் என நிறுத்தினார்கள். 2001ஆம் ஆண்டுக்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப் படவில்லை. தொ.மு.ச. உள்ளிட்ட சங்கங்கள் நீதி மன்றத்திற்குச் சென்ற பின்னர் தற்காலிக ஓய்வூதியம் (Provisional Pension) ரூபாய் 5000/- வழங்கப்பட்டது. அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர் முழு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அதுமட்டுமில்லாமல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் ரூபாய் 6000/- என பெற்று வந்த போனசை ரூபாய் 2499/-ஆக குறைத்து வழங்கினார்கள். அதன் விளைவாக நடைபெற்ற 17 நாள் வேலை நிறுத்தத்தை காரணம் காட்டி ஊதியத்தில் குறைத்தார்கள். ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரால் ஆண்டு ஊதிய உயர்வு, ஆய்வுப் பலன், பதவி உயர்வு உள்ளிட்ட சலுகைகளை அ.தி.மு.க. அரசு பறித்தது.

2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான வழித்தடங்களில் பாதியை தனியாருக்கு தாரை வார்ப்பதற்கு அரசிதழ் அறிவிக்கை (Gazette Notification) வெளியிட்டு போக்குவரத்துக் கழகங்களை தனியார் மயமாக்க துணிந்தது அ.தி.மு.க. அரசு. அ.தி.மு.க. அரசின் தனியார் மயத்தை எதிர்த்து தொ.மு.ச. மாவட்டத்திற்கு ஒரு வழக்கு வீதம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, போக்குவரத்துக் கழகங்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்றைய தினம் செய்தியாளர்களைச் சந்திக்கின்றபோது செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், தனியார் மயமாக்கினால் மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் பேருந்துகள் அரசுடைமையாக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டு போக்குவரத்துக் கழகங்களை பாதுகாத்தது தி.மு.க..

#### தொழிலாளர்களை நட்டாற்றில் விட்ட அ.தி.மு.க.

வேலை நியமனம் தடைச் சட்டம் கொண்டு வந்து பணியாளர் நியமனத்தை தடை செய்து தற்காலிகமாக பணிபுரிந்து வந்த தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்வதையும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தள்ளி வைத்தார்கள். பென்ஷன் பெறுவதற்கான தகுதி காலம் 30 ஆண்டுகள் என்பதை 33 ஆண்டுகளாக உயர்த்தி தொழிலாளர்களை வஞ்சித்தது அ.தி.மு.க. அரசு. இந்தியா முழுமைக்கும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் 1.1.2004 முதல் நடைமுறைக்கு வந்தது. ஆனால் அ.தி.மு.க. ஆட்சி செய்த தமிழகத்தில் 1.4.2003 என 9 மாதங்கள் முன்னதாக அமல்படுத்தி தொழிலாளர்களை வஞ்சித்த பெருமைக்குரியது அ.தி.மு.க.. பென்ஷனுக்கான ஊதியக் கணக்கீட்டிற்கு கடைசி மாத அடிப்படை சம்பளம் என்பதை கடைசி பத்து மாதத்தின் சராசரி என்று அ.தி.மு.க. அரசு மாற்றியது.



அ.தி.மு.க. ஆட்சியில் பணிக்கொடையை பாதியை பிடித்துக் கொண்டு பாண்டாக வழங்கினார்கள், விடுப்பு ஒப்படைப்பை பறித்தார்கள், பொங்கல் போனஸை பறித்தார்கள், பணிமனைகள் தோறும் ஓட்டுநர் உரிமத்தைக் காட்டி பணியில் சேரும் நூதன முறையைக் கடைப்பிடித்து சுமார் 15000 பேரை மாநிலம் முழுவதும் நட்டாற்றில் விட்டது அ.தி.மு.க..

1998 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு மற்றும் 2004 ஆம் ஆண்டு என இரண்டு ஊதிய ஒப்பந்தங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் அ.தி.மு.க. அரசு மூன்றாண்டு என போடப்பட்ட 1998 ஒப்பந்தத்தை தன்னிச்சையாக 5 ஆண்டாக மாற்றினார்கள். 2003 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வர வேண்டிய ஒப்பந்தத்தை 2005 ஆம் ஆண்டில் நிறைவேற்றினார்கள். ஒரு ஒப்பந்தத்தையே சாப்பிட்டார்கள். தொழிற்சங்கங்களோடு ஜனநாயக முறையில் பேச்சுவார்த்தை நடத்தாமல் தன்னிச்சையாக ஜெயா தொலைக்காட்சியில் ஒப்பந்த முடிவுகளை அறிவித்தார்கள். 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை சராசரியாக ஒவ்வொரு போக்குவரத்துத் தொழிலாளர்களிடமிருந்து குறைந்தபட்சம் 80 ஆயிரமும், அதிகபட்சமாக 1 லட்சம் வரையிலும் கிடைக்க வேண்டிய பணம் பறிக்கப் பட்டது. இதன் விளைவாக ஒட்டுமொத்தமாக போக்குவரத்துத் தொழிலாளிகள் அன்றைய தினம் அ.தி.மு.க. ஆட்சியில் இழந்த தொகை சுமார் 1000 கோடி ரூபாய் ஆகும்.

#### தொழிலாளர்களுக்கு வஞ்சனை! செய்தது அ.தி.மு.க.

2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த அ.தி.மு.க. 2013 ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்தத்தை 2015 ஆம் ஆண்டு செய்தார்கள். பேச்சுவார்த்தை துவங்க வேண்டுமென நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களில் தொ.மு.ச.வினர் என தரம் பிரித்து கைது செய்து சிறையில் அடைத்தது அ.தி.மு.க. அரசு. 2016 ஆம் ஆண்டு செய்ய வேண்டிய ஊதிய ஒப்பந்தத்தை 2018 ஆம் ஆண்டு செய்தார்கள். 2019-ல் வர வேண்டிய ஊதிய ஒப்பந்தத்தை அ.தி.மு.க. ஆட்சி வெளியேறுகிற 2021 வரை செய்ய மறுத்தார்கள். 2016 ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்தத்தின் போது 6 ஊதிய விகிதங்களை அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் ஒரே ஊதிய விகிதமாக மாற்றினார்கள். காரணி 2.44 -க்கு மேல் ஊதியம் வழங்க மறுத்தார்கள். ஊதிய அட்டவணை பே மெட்ரிக்ஸ் போட மறுத்தார்கள். 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட ஓய்வூதிய அகவிலைப்படியை எக்காரணமுமின்றி நிறுத்தினார்கள். போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போதெல்லாம் வஞ்சனையே செய்து தொழிலாளர்களின் அடிப்படை உரிமையைப் பறித்தது.

2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சி 2019 ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்தத்தை மிகச் சிறப்பாக செய்து போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் கோரிக்கையான தனித்தனி ஊதிய விகிதம், பே மேட்ரிக்ஸ், காரணி 2.57 அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்கியதோடு, கூடுதலாக 5 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கியது கழக அரசு. போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு அ.தி.மு.க. அரசால் பறிக்கப்பட்ட போனஸ் 20 சதவிகிதமாக நிர்ணயித்து ரூபாய் 16,800/- போனஸாக வழங்கியது கழக அரசு.

போக்குவரத்துக் கழகங்களில் வரவுக்கும் செலவுக்கும் வித்தியாசத் தொகையை வழங்குவதற்கு அரசாணை 36-ஐ பிறப்பித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விபத்து ஏற்பட்டால் ஓட்டுநர்கள் இடமாற்றம் செய்யப்படும் அ.தி.மு.க. அரசின் கொடுங்கோன்மை அரசாணையை ரத்து செய்தது. போக்குவரத்துக் கழகங்களின் மகளிர் உரிமைப் பயணத்திற்கு ரூபாய் 2800 கோடி, டீசல் மானியமாக ரூபாய் 2000 கோடி, மாணவர் சலுகைப் பயணத்திற்கு ரூபாய் 1500 கோடி, மூத்த குடிமக்கள் பயணத்திற்கு ரூபாய் 22 கோடி என போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.6322 கோடி நிதி வழங்கி போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் எவ்வித பிரச்சினையுமின்றி ஊதியம் பெறுவதற்கு வழிவகை செய்துள்ள ஆட்சி கழக ஆட்சி.

அ.தி.மு.க. ஆட்சி செய்ததெல்லாம் போக்குவரத்துத் தொழிலாளியின் உரிமைகள், சலுகைகளைப் பறித்தார்கள். இன்றைக்கு புனிதர்களாக வேடமிட்டு வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களே உங்களை வாழ்விப்பது யார், வஞ்சிப்பது யார். சிந்திப்பீர்! செயல்படுவீர்!

இவ்வாறு மு.சண்முகம் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி, 17 வது வட்டம், கொசப்பூர் பகுதியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன், மண்டலக்குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம், மண்டல அலுவலர் கோவிந்தராஜன் ஆகியோர் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று முகாமை துவக்கி வைத்தனர். வட்ட செயலாளருக்கு கருணாகரன், சி.மூர்த்தி, சி.பாலாஜி, சென்னை மாநகராட்சி அதிகாரிகள் பிரதீப்குமார், சீனிவாசன், திருமாறன், மாதவரம் பால்பண்ணை காவல் நிலைய ஆய்வாளர் வேலுமணி மற்றும் கழகத்தினர் உடன் உள்ளனர்.



முதலீட்டுக்கான இலக்குகளை நிர்ணயித்துச் செயல்பட இதுவே சரியான தருணம். தமிழ்நாடு அரசு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என இலக்கு நிர்ணயித்துள்ளது. இவ்வாறு இலக்கு நிர்ணயிக்கும்போது, அனைவரும் சேர்ந்து பணியாற்றி அதற்காக உழைப்பார்கள். சுற்றுலாத்துறையில் அதிக தொழில் வாய்ப்புகள் உள்ளன. இங்கு ஏராளமான பொறியாளர்களும், உயர் கல்வி படித்தவர்களும் இருக்கின்றனர். எனவே நாம் உற்பத்தித் துறை மட்டுமின்றி இதர துறைகளிலும் வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

**- ரகுராம் ராஜன்**
ரிசர்வ் வங்கி முன்னாள் ஆளுநர்



கடந்த ஆறு மாதங்களாக தமிழகத்தில் தொழில் துறை மற்றும் முதலீட்டுக்கான சூழல் செயல்பாடுகள் மிகச் சிறப்பாக இருப்பதைப் பார்க்கிறேன். ஏராளமான முதலீடுகள் வருகின்றன.

30 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிற்சாலைகள் தமிழகத்தில் செயல்படுவது முன்னெப்போதும் நிகழ்ந்திராதது. இதுபோன்ற சாதகமான அம்சங்களால் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது சாத்தியமானதாக இருக்கும்.

**-அரவிந்த் சுப்பிரமணியன்**
ஒன்றிய அரசின் முன்னாள் பொருளாதார ஆலோசகர்



தமிழகம் தேசிய அளவில் வணிக நடவடிக்கைகளை எளிதாக்குதலில் 14 ஆவது இடத்தில் இருந்து தற்போது மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஒட்டுமொத்த உற்பத்தியைப் பொருத்தவரை 2022 - 23 இல் நமது பங்கு 9.6 சதவீதமாகும்.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் தமிழகத்தை முதலீட்டுக்கான மாநிலமாகப் பார்க்கின்றன. கடந்த 2 ஆண்டுகளாக மாநிலம் அதிக அளவிலான முதலீடுகளைப் பெற்றுள்ளது.

2021 மே முதல் தற்போது வரை 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.2.70 லட்சம் கோடிக்கான முதலீடுகள் பெறப்பட்டதுடன், 4 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

**- வேணு சீனிவாசன்**
டி.வி.எஸ். குழுமத் தலைவர்



உலக அளவிய ஹைட்ரஜன் சமூகத்தை வளர்க்க உதவிட வேண்டும் என்பதற்காக ஹூண்டாய் ஹைட்ரஜன் விஷன் அமைப்புடன் இணைந்துள்ளோம். சென்னை ஐ.ஐ.டி. மையத்தின் உதவியுடன் ஹைட்ரஜன் ஆதார மையம் ஏற்படுத்திட, தமிழ்நாடு அரசுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள இருக்கிறோம்.

**-உன்சூகிம்**
மேலாண் இயக்குநர்
ஹூண்டாய் மோட்டார் இந்தியா



இந்தியாவில் மிக அதிக தொழிற்சாலைகளின் இருப்பிடமாக தமிழ்நாடு இருக்கிறது. தமிழ்நாட்டின் தொழிற் கொள்கையாலும், அங்குள்ள தொழிலாளர் வேலை திறத்தாலும் அம்மாநிலம் ஒரு டிரில்லியன் டாலர் என்கிற குறிக்கோளை நிச்சயம் அடையும்.

**- சஜ்ஜன் ஜிண்டால்**
மேலாண் இயக்குநர்
ஜே.எஸ்.டபுள்யு குரூப்

# உலக முதலீட்டாளர்களின் ஒரே தேர்வு தமிழ்நாடே!

## நாளேடுகள் தரும் நற்செய்தி!



THE HINDU

GIM kicks off with vision report for $1-tn economy

THE NEW INDIAN EXPRESS

TN inks MoUs worth ₹62K cr on

THE TIMES OF INDIA

Tamil Nadu is looking at a diverse spread of sectors to help its economy grow while building on traditional strengths

GIM POWERS DRIVE TO $1 TRILLION

தினத்தந்தி

முதல் நாளிலேயே ரூ.5½ லட்சம் கோடி ஒப்பந்தம்:

முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முன்னணி

தினகரன்

சென்னையில் 2 நாள் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடங்கியது

ஒரே நாளில் ₹5.5 லட்சம் கோடி முதலீடு

DECCAN Chronicle

TNGIM 2024: MoUs signed as investments pour into state

Ambani: Reliance to enter renewable energy & green hydrogen sector

TN revs up to become technical textile hub

இந்து தமிழ் திசை

முதலீட்டாளர் மாநாடுக்கு தொழில் துறையினர் பாராட்டு

தினமலர்

ரூ.6 லட்சம் கோடிக்கு முதலீடு ஈர்ப்பு மின் துறையில் ரூ.1.35 லட்சம் கோடி!

DT NEXT

100 MoUs, Rs 5.5 lakh cr investment: TN flexes GIM m

IT'S RAINING DEALS

# கலைஞர் : பெரியாரிய கம்யூனிஸ்ட்

■ நீரை.மகேந்திரன்



இந்தியாவில் மாபெரும் மக்கள் திரள் கொண்ட மாநிலக் கட்சியான தி.மு.கழகத்தின் தலைவராக ஐம்பதாண்டு காலம் செயல்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிந்தனையாற்றலை அறிந்து கொள்வதொன்றும் கடினமான காரியம் அல்ல. மலரின் பல்வேறு அடுக்குகளைப் போல அவர் நிகழ்த்திய செயல்கள் ஒவ்வொன்றையும் நாம் பிரித்துப் பகுத்துப் பார்க்கக் கூடியதுதான்.

அரசு ரீதியாகட்டும், ஆட்சிக்கு அப்பாற்பட்ட பணிகளாகட்டும் எந்தச் செயலிலும் அவர் பார்வை சமூக நீதி கொண்டது என்பதை, நாம் அறிந்திருக்கிறோம். அப்படியான சமூகநீதிப் பார்வையிலும் மேலும் சில நுட்பமான அடுக்குகளாக அவரிடம் திராவிட மனம் கொண்ட இடதுசாரி சிந்தனையைப் பார்க்கலாம். அவை சொற்களாக மட்டும் வெளிப்படுவது அல்ல, செயல்களாகவும் அடையாளம் காட்டக் கூடியவையாகப் பல மேம்பட்ட விளைவுகளை உருவாக்கி இருக்கின்றன.

## விவேகம் எனும் வெள்ளி முளைத்து...

2001 ஆம் ஆண்டில் அவர் இந்த வாசகத்தை முன்வைத்தார். "விவேகம் எனும் வெள்ளி முளைத்து சாதி மதப்பித்து எனும் சனி தொலைந்தால்தான் சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும்". இந்த வாசகம் மக்கள் மத்தியில் பரவலானது. அதே ஆண்டில் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' ஏடு கலைஞரை ஒரு பேட்டி எடுக்கிறது. அந்தப் பேட்டியில் ஒரு கேள்வி.

"உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய 'லட்சிய வெற்றி' எதுவாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?" என செய்தியாளர் கேட்கிறார். அதற்குப் பதில் சொல்கிறார் கலைஞர்.

"ஒரு பொதுக்கூட்டத்தில் பேச்சு கேட்க வந்து, குழுமியிருப்போர் அனைவரும் தமிழர்களாக இருக்கிறார்கள். ஆனால், கூட்டம் முடிந்து கலைந்து செல்லும் போது தனித்தனி சாதிகளாகக் கலைந்து செல்கிறார்கள். அந்த நிலைமாறி தமிழர்களாகவே கூட்டத்தில் அமர்ந்து கொள்ளும் பொழுது , தமிழர்களாகவே கலைந்து செல்லும் காலம் வந்தால் அதுதான் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் எதிர்பார்க்கும் 'லட்சிய வெற்றி' என்பதாகும்" என்கிறார்.

அவற்றைச் சொற்களாகப் பார்க்காமல், செயல்களாகப் பார்ப்பதெனில், அவர் தனது எண்பதாவது அகவையில் இருக்கும்போது மட்டுமல்ல, 1944 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற இருந்த வர்ணாசிரமக் கூட்டத்தைக் கண்டித்து, தனது இருபதாவது வயதில் துண்டு அறிக்கை எழுதியவர். அப்போதே அவரின் தரமான செய்கைதான் 'ஒரே ரத்தம்' நாடகம். அந்த நாடகம்தான் பின்னாளில் திரைப்படமாக வெளிவந்து, வெற்றி பெற்றது.

## நவீன போர்க் கலை!

சாதி, சமய, வேறுபாடு அற்ற சமத்துவச் சமுதாயம் காண வேண்டும் என்கிற தீராத வேட்கை எங்கிருந்து வந்தது? குறிப்பாக சிக்கலான இந்திய சமூகத்தில் அதை எப்படி நிகழ்த்திக் காட்டுவது என்பதையும் கலைஞரிடமிருந்து கற்றுக்கொள்வது நவீன போர்க் கலையாகும்.

தாழ்த்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்களுக்கும் 1989 ஆம் ஆண்டில் தென் தமிழகத்தில் ஒரு பிரச்சினை உருவானது. கலவரமாக மாறியது. இவர் அந்தச் சூழலை முடிவுக்குக் கொண்டுவர, அப்போது நடைபெற இருந்த அமைச்சரவைக் கூட்டத்தையும் ரத்து செய்துவிட்டு, தென் மாவட்டங்களுக்கு நேரில் சென்று நிலைமையைச் சீராக்கினார்.

சிறுபான்மையினர் நலன், தாழ்த்தப்பட்டவர்கள் நலன் என்கிற நோக்கங்களில் உறுதியாக நின்ற அவர், அந்த நோக்கத்தின் தொடக்கக் கால, வேகத்தைப் போலவே இறுதி காலகட்டத்திலும் இருக்கிறார். ஒரு பேட்டியில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்கள் கலைஞரின் செயல்களை நினைவு கூர்ந்தார்.

"ஐந்து சென்ட் மனைப்பட்டா வழங்கவேண்டும், இந்திரா குடியிருப்பில் ஒன்றரை லட்ச ரூபாயில் வீடு என்பதை நிதியை அதிகப்படுத்த வேண்டும், பஞ்சமி நிலங்களை மீட்க குழு அமைக்கவேண்டும் என்றெல்லாம் தீர்மானங்கள் நிறைவேற்றி, அவரிடம் அளித்தோம். அதேபோல், மறைமலை நகரில் நடந்த விழாவில் கலந்துகொண்ட கலைஞர், பஞ்சமி நிலங்களுக்காக ஒரு கமிஷன் நியமித்தார்" எனக் குறிப்பிடுகிறார். 'இட ஒதுக்கீடு', 'சமத்துவபுரம்' என எல்லாவற்றையும் குறிப்பிட்டோமெனில், கலைஞரின் ஆட்சிக் காலங்கள் எல்லாம், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட பட்டியல் மக்களின் மீட்சிக் காலமாக உருப்பெறும்.

## நேருவுக்குப் பின்னர்

அவர் அடிக்கடி 'நானும் ஒரு கம்யூனிஸ்ட்டுதான்' என மேடைகளில் பேசுவார். அது மேடைப் பேச்சுக்காக மட்டுமல்ல, தனது ஆட்சிக் காலத்தில் கூடுமானவரை சோசலிச ஆட்சித் திட்டத்தின் கூறுகளை சின்னச் சின்ன முயற்சிகள் செய்து பார்த்திருக்கிறார். இந்தியாவில் ஜனநாயக முறையில் சோசலிச பாணி ஆட்சிக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என ஆசைப்பட்டவர், முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு.

பல பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கியதுடன், ஐந்தாண்டு திட்டம் என்கிற சோசலிச பாணியிலான வளர்ச்சி இலக்கினை முன்வைத்தும் செயல்படுத்தினார். அவருக்குப் பின்னர் தமிழ்நாட்டில், சோசலிஸ்ட்டு அரசு பாணியிலான ஒரு முன்னெடுப்பில், தனது ஆட்சியின் தொடக்கக் காலத்தில் திட்டக்குழு அமைத்தவர், நான்காவது ஆட்சிக் காலத்தில் செய்து பார்த்த முயற்சிதான் உழவர் சந்தைகள். 1999 ஆம் ஆண்டு உழவர் சந்தைகளைத் தொடங்கி வைத்தார்.

விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் விளைவிக்கும் காய்கறிகள், பழங்கள், தேங்காய் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களை இடைத்தரகர்கள், வியாபாரிகள் குறுக்கீடு ஏதும் இல்லாமல் நேரடியாக மக்களுக்கு விற்பனை செய்யும் வகையில், உழவர் சந்தைத் திட்டம் தொடங்கப்பட்டது. இப்போதுவரை அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது பயனளித்துக் கொண்டிருக்கிறது.

உழவர் சந்தைக்குச் செல்லக்கூடிய காலை நேரப் பேருந்துகளில் விவசாய மக்கள் பொருட்களை வைப்பதற்காக இருக்கைகள் அகற்றப்பட்டு இடம் ஒதுக்கப்பட்டன . சில இடங்களில் இருக்கைகளுக்கு பதில் சுமை தாங்கும் கம்பிகள் பொருத்தப்பட்டன . குறிப்பாக, உழவர் சந்தைக்குச் செல்லக்கூடிய உழவர்களுக்குப் பயணச்சீட்டும் விலை இல்லாமல் அளிக்கப்பட்டது. இப்படி ஒவ்வொன்றுக்கும் எளிய தீர்வுகள் மூலம் உழவர் சந்தையை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டினார்.

அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க, அவர் தேர்ந்தெடுத்த நாள் என்ன தெரியுமா?

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதி. அதாவது சோசலிச முறையிலான திட்டங்களை இந்தியாவில் முன்னெடுத்த நேரு அவர்களின் பிறந்த நாள்.

நேரு அவர்களைப் போலவே கூட்டுறவுத் துறையை அவர் செழுமைப்படுத்திய விதம், கூட்டுறவுத் துறைத் தேர்தல்களை முறையாக நடத்துவது ஆகியவை கலைஞர் ஆட்சி காலத்தில்தான் எந்த விதமான தயக்கமும் இன்றி நடைபெற்றிருக்கின்றன.

தான் ஒரு கம்யூனிஸ்ட் என அவர் குறிப்பிடுவது அரசியல் கணக்கு அல்ல, அது திட்டங்களின் கணக்கிலிருந்து எனச் சொல்வதற்கு பல குறிப்புகள் இருக்கின்றன.

## சமதர்மம் பெரியார்

பெரியார் சுயமரியாதை சமதர்மம் என்கிற நூலின் முன்னுரையில் பேராசிரியர் ந.முத்துமோகன், பெரியாரிய மார்க்சிய பார்வை எப்படியானது எனக் குறிப்பிடுவார்.

"பெரியாரிய பார்வையில் சமதர்மம் என்பது அறியப்பட்ட மார்க்சியத்தில் இருந்து வேறுபடுகிறது. குறிப்பாக பெரியாரின் சமதர்மம் என்பது பொருளாதாரப் பொதுவுடமையை மட்டும் குறிக்கவில்லை . சாதி, மதம், கடவுள், ஆண், பெண் பெயரால் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வு நீங்கிய நிலையே என பெரியார் குறிப்பிடுகிறார்.

பொருளாதாரத்தை மட்டும் முழுக்க முழுக்க முன்னிலைப்படுத்தாத சமத்துவம் என்கிறார். வாழ்வின் பல்வேறு அளவுகோல்களின்படியும் சமத்துவம் கோரும் சமதர்மம் அது" எனக் குறிப்பிடுகிறார் . அதாவது பெரியார் முன் வைக்கும் திராவிடக் கூறுகள் கொண்ட இடதுசாரிப் பார்வை என்பது பொருளாதார அளவுகோல்கள் மட்டும் கொண்டதல்ல. பூர்வீக மார்க்சியத்தில் இருந்து வேறுபட்டுப் பல்வேறு அளவுகள் கொண்ட சமதர்மம் என மாறுகிறது.

பெரியாரின் இந்தப் பார்வைதான், பேரறிஞர் அண்ணாவின் பயணமாகிறது. பிறகு பெரியாரின் மார்க்சிய அணுகுமுறையை தமிழ்நாட்டில் செயல்படுத்திப் பார்த்தவர் கலைஞர். அதாவது கலைஞர் பெரியாரிய கம்யூனிஸ்ட்.

**தான் ஒரு கம்யூனிஸ்ட் என அவர் குறிப்பிடுவது அரசியல் கணக்கு அல்ல, அது திட்டங்களின் கணக்கிலிருந்து எனச் சொல்வதற்கு பல குறிப்புகள் இருக்கின்றன.**

## திராவிட இயக்க இதழ்கள் - கழகக் குரல்




திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரான சொக்கலிங்கம் சிட்டிபாபு அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இதழ் 'கழகக்குரல்'.

1974 ஆம் ஆண்டு தி.மு.க. வெள்ளி விழாவையொட்டி தொடங்கப்பட்ட வார இதழ் இது. படத்தில் காண்பது 1975 ஆம் ஆண்டின் சிறப்பு மலர். பேரறிஞர் அண்ணாவின் உரைகளை மக்களிடம் பரவலாகக் கொண்டு சென்ற இதழ்களில் மிக முக்கியமான இதழ் இது.

நெய்வேலி சுப்பிரமணியன் என்பவர் 1974 செப்டம்பர் 29 தேதியிட்ட இதழில் பேரறிஞர் அண்ணா மற்றும் அமெரிக்க முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கன் ஆகியோரின் குணாதிசயங்களை ஒப்பிட்டு ஒரு துணுக்கு எழுதியுள்ளார்.

"...'துப்பாக்கி ரவையைவிட ஓட்டுச் சீட்டுதான் வலிமையானது' என்று முழங்கியவர் ஆப்ரகாம் லிங்கன். 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்று முழங்கியவர் அண்ணா

ஆபிரகாம் லிங்கன் ஏழைக் குடிசையில் பிறந்தவர். அண்ணாவும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். ஆப்ரகாம் லிங்கன் இரவு முழுவதும் புத்தகங்கள் படிக்கும் குணமுள்ளவர். அண்ணா விடிய விடிய புத்தகங்களைப் படிப்பவர்.

ஐம்பது மைல் சுற்றுவட்டாரத்தில் படிக்காத புத்தகங்களே இல்லை என்று பெருமை பெற்றவர் ஆப்ரகாம் லிங்கன். மிகப்பெரிய, பல்லாயிரக்கணக்கான நூல்களைக் கொண்ட கன்னிமாரா நூலகத்தையே கரைத்துக் குடித்தவர் என்று பெயர் பெற்றவர் அண்ணா..." என்று போகும் அந்தத் துணுக்கு இப்படி முடிகிறது:

'ஆப்ரகாம் லிங்கன் பிறந்தது - 1809! அண்ணா பிறந்தது 1909!'

## :.ப்ளாஷ்பேக்





சேசுராசு

### தமிழ்நாட்டுக்கு மும்பை நிதி!

1996 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு முழுக்க கழக உடன்பிறப்புகள் தேர்தல் நிதி அளிக்கும்படி தலைவர் கலைஞர் அறிவித்தார். அப்போது மும்பை தி.மு.க சார்பில் ரூ.2 இலட்சம் தேர்தல் நிதியை அன்றைக்கு மாநிலச் செயலாளர் த.மு.பொற்கோ அவர்கள் தலைவர் கலைஞர் கைகளில் வழங்கினார். பேராசிரியர், ஆற்காட்டார் ஆகியோர் அருகில் இருந்தார்கள். அப்போதைய இளைஞர் அணி அமைப்பாளராகிய நானும் உடனிருந்தேன்.

**-மும்பை சேசுராசு, மாநில இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், மும்பை தி.மு.க.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### சுவரொட்டிகள் ஒட்டிய அண்ணா!

**1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சென்னை கொத்தவால்சாவடி பகுதியில் பேரறிஞர் அண்ணா பொதுக்கூட்டத்தில் பேச திட்டமிடப்பட்டிருந்தது. கூட்டத்துக்காக 100 சுவரொட்டிகளைக் கடன் சொல்லி அச்சடித்துவிட்டார்கள். ஆனால், ஒட்டுவதற்கு கூலி கொடுக்க யாரிடமும் பணம் இல்லை. அதனால், என்.வி.என். நடராசன் போஸ்டரையும், 'நம் நாடு' சிவஞானம் பசை வாளியையும், தேவராசன் ஏணியையும் எடுத்துக் கொண்டனர். அண்ணாவும், டி.வி.முருகேசனும் பசை தடவி சுவரொட்டிகளை ஒட்டினர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 354




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131